
# தருமவாசம்



அமரர்

**தம்பிப்பிள்ளை தருமரெத்தினம்**

அவர்களின் 31ம் நாள்


நினைவுமலர்

உ



"ஓம் மஹா கணபதியே நமஹ"

முதலுமாய் முடிவுமாகி முடிவிலா முடிவதாகி
உருவமாய் உருவிலாது உள்ளொளி பரப்பியெங்கும்
கருப்பொருளாகியென்றும் கணபதி நாமம் கொண்ட
களுவை மாநகருளானை கருத்தினிலிருத்தி வாழ்வாம்!



# சமர்ப்பணம்

அன்பில் சிறந்த தந்தையாக

ஆற்றல் மிகுந்த சகோதரனாக

பாசம் நிறைந்த கணவனாக

போற்றுதற்குரிய புத்திரனாக

பண்புடன் வாழ்ந்த மனிதனாக

யாவரையும் மதிக்கும் நண்பனாக

களுவை நகருறை கணபதியின் பக்தனாக

என்றுமே எங்கள் இதயம் வாழும்

தருமருக்கு

இந்நூல் சமர்ப்பணமே

**- உறவுகள் -**

உ



அமரர்

# தம்பிப்பிள்ளை தருமரெத்தினம்

( களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய
பரிபாலனசபையின் முன்னாள் உறுப்பினர்,
ம. தெ. எ. கூட்டுறவுச் சங்க ஓய்வுநிலை சாரதி )

## திதி வெண்பா

சார்வரி வருஷ மானித்திங்கள் அபரபக்க
சதுர்த்திதன் இருபத்தைந்தில் சீரொடு வாழ்ந்த
பார்புகழ் சாரதி தருமரெத்தினம்-ஐங்கரனடியினை
சேர்ந்த நன் நாளென்றறி

மண்ணில்
04.12.1943

விண்ணில்
09.07.2020

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்:**

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே

**திருவாசகம்:**

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

**திருவிசைப்பா:**

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர்புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
    மெய்யடி யார்கள் விரைந்து வம்பின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
    ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
    வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்று மென்றும் உள்ள
    பொருளொன்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
    அத்திக்கிறை சத்திச் சரவண
        முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
    முற்பட்டது கற்பித் திருவரும்
        முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
    ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
        பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
    பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
        பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்


கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

- திருச்சிற்றம்பலம்-



# வாழ்க்கைப் பயணத்தின் தடயங்கள்....

மட்டக்களப்பின் தெற்கே நீர்வளம், நில வளங்களைத் தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் கொஞ்சும், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் கிராமத்தில் பெயரும், புகழும் மிகுந்த பரம்பரையின் வழித்தோன்றலில் சுரக்காமூர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த வே. தம்பிப்பிள்ளை அவர்களுக்கும், பேனாச்சி குடும்பத்தை சேர்ந்த பொ. மாணிக்கம் என்பவருக்கும் 1943ம் ஆண்டு முதல் வாரிசாக அவதரித்தவரே தம்பிப்பிள்ளை தருமரெத்தினம் ஆவார். இவருடன் இணைந்து எட்டு உடன் பிறப்புக்கள் இருந்தனர். இவர் தனது ஆரம்பக்கல்வியினை களுதாவளை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் கற்றார். தருமரெத்தினத்தின் குடும்பத்தினர் மிகுந்த செல்வந்தர்களாக இவ்வூரில் திகழ்ந்தனர்.

இவரது தந்தையான தம்பிப்பிள்ளை அவர்கள் 1965ம் ஆண்டு புதிய வீட்டினைக் கட்டுவதற்காக பழுகாமம் களுதாவளைத் துறையின் ஊடாக முதிரை மரங்களை வண்டில்களில் கொண்டு வரும் போது அம்மரங்களில் ஒன்று எதிர்பாராத விதமாக இவரது காலில் விழுந்ததால் உபாதை ஏற்பட்டு அவர் வீட்டிலேயே இருக்க வேண்டிய சூழல் உருவானதன் காரணத்தினால் இவரால் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்களான வீட்டையும், தோட்டங்களையும், வாகனங்களையும், வயல்கள் மற்றும் ஏனைய சொத்துக்களையும் பராமரிக்க வேண்டிய தேவையும் அத்துடன் குடும்பச் சுமையினை ஏற்க வேண்டிய சூழ் நிலையும் ஏற்பட்டதனால் அன்றிலிருந்து தனது சகோதர சகோதரிகளை வழிநடத்தி பெற்றோருக்கு உகந்த பிள்ளைகளாகவும், சமூகத்திற்கு நல்ல பிரஜைகளாகவும், குடும்பப் பொறுப்பு மிக்கவர்களாகவும் உருவாக்கும் பெரும் சுமையினை ஏற்று அதில் வெற்றியும் கண்டார்.

எந்தவொரு பணியையும் குறித்த நேரத்திற்கு செய்து முடிக்க வேண்டும் என்ற ஆளுமையுடன் திகழ்ந்த இவர் எப்போதும் நேர்த்தியாக உடையணிந்து தினந்தோறும் முகச்சவரம் செய்த முகத்துடன் மிடுக்காக வலம் வருவது இவரது கலையாகும். தனது தந்தைக்கு எவ்வளவோ சொத்திருந்தும் "உத்தியோகம் புருஷ லட்சணம்" எனும் பழமொழிக்கேற்ப தனக்கென்று சாரதித் தொழிலைப் பயின்று அதில் விற்பன்னராக விளங்கினார்.

செய்யும் தொழிலே தெய்வமென்று எண்ணி தனது சாரதி தொழிலை செய்து வந்தவேளையில் குடும்பத்தினரின் விருப்புக்கு மறு பேச்சின்றி அவர்களின் விருப்புக்கேற்ப களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நேசம்மா தம்பதியின் மகளான இரத்தினம் மாவை சுற்றத்தாரின் ஆசீர்வாதத்தோடு 1973ம் ஆண்டு கரம்பிடித்துக் கொண்டார். அன்று முதல் இன்று வரை ஒருவருக்கொருவர் நல்ல புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்போடும். இருவரது பெயருக்கு ஏற்றாற்போல் இரத்தினங்களாக மிளிர்ந்ததுடன், அயலவர்கள் மூக்கின் மேல் விரல் வைக்கும் அளவிற்கு வாழ்ந்து காட்டினர்.

இவ்வேளையில் ஜெயராஜ் என்ற புத்திரரையும், இந்துஜா என்ற புத்திரியையும் ஈன்றெடுத்து அழகிய சிறு குடும்பமாக வாழ்ந்து வந்தனர். பிள்ளைகளை சிறந்த கல்வியில் சிறந்த அறிவுடையவர்களாக உருவாக்குவதில் வெற்றியும் கண்டிருந்தார். விடா முயற்சியுடன் கூடிய கடின உழைப்பின் விளைவாக தனது குடும்பத்தின் எதிர்கால வாழ்க்கை முறையை ஒளிமயமாக்கிய சிறந்த குடும்பத்தலைவராகத் திகழ்ந்தார்.

தன் வீட்டிற்கு வருபவர்களையும் சரி, அதே போன்று அயலவர் களையும் உபசரிப்பதில் இவருக்கு நிகர் இவரே.

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு”

எனும் குறளுக்கு ஏற்ப இவரின் விருந்தோம்பல் பண்பு அமைந்திருந்தது. தன்னை நாடி வருபவர்களுக்கு மாத்திரமன்றி பிறர் கஷ்டமறிந்து தேடிச்சென்று பிறருக்கு உதவும் குணம் பெரும்பாலானோரிடம் இருப்பதில்லை. ஆனால் அக்குணம் இவரிடம் அலாதியாக காணப்பட்டது. இதன் காரணமாக பிறர் கஷ்டத்திற்கு கொடுத்த பல பெறுமதியான பொருட்கள் இவர் கரம் மீண்டும் வராத போதிலும் இவர் அதைப்பற்றி எப்போதும் மனம் நொந்ததில்லை. இவரது அன்பான மனைவி இதற்கு குறுக்கிட்டதும் இல்லை.

இவரது இளம் பராயத்தில் (12 வயதில்) வாகனங்களை செலுத்தி மக்களுக்கு உதவி செய்தமையினால் “கார்க்காரத் தருமன்” என செல்லமாக அழைக்கப்பட்டார். இப்பிரதேசத்தில் இச்செல்லப் பெயரைச் சொன்னால் இவரைத் தெரியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்

அந்தளவிற்கு அக்காலப்பகுதி முதல் பிரபல்யம் பெற்ற ஒருவராகத் திகழ்ந்தார். அத்துடன் பல வாகனங்களை செலுத்தி அவற்றின் பயன்பாடு மற்றும் நுட்ப முறைகளை நன்கு அறிந்திருந்தமையினால் புதிய வாகனங்களை வாங்க விரும்புபவர்களுக்கு குறித்த வாகனங்களின் தரம் பற்றிய ஆலோசனைகளை வழங்குவதுடன் எந்த விதமான பிரதி உபகாரங்களுமில்லாமல் இச்சேவையை செய்து கொடுப்பார். அதுமட்டுமன்றி தான் பயன்படுத்துகின்ற எந்தவொரு வாகனத்தையும் தனது பிள்ளை போன்று மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கும் குணாதிசயம் கொண்டவராகக் காணப்பட்டார்.

அக்காலப்பகுதியில் திருமணம் முடித்த பிறகும் தனது "கார்" சேவையினை மக்களுக்குச் செய்து பணியாற்றினார். அப்போது " மெறிஸ் மைனர்" EL-2893 இலக்கமுடையது கார் 1980 களில் மக்களுக்குச் காராகவும், அம்பியுலன்சாகவும் பல சேவைகளைச் செய்ததை மறக்கமுடியாது. அதன்பின் அதேபோன்று "கேம்றிஜ்", "ஹில்மன்" கார்களையும் அவர் பயன்படுத்தினார்.

வாகனங்களை ஓட்டுவதிலும் சரி அதே போன்று பராமரிப்பதிலும் சரி இவர் தனிச்சிறப்புடன் காணப்பட்டதினால் இவரைத் தேடி பல்வேறு தொழில் வாய்ப்புக்கள் வந்துகொண்டே இருக்கும். இப்பயனாகவே களுவாஞ்சிகுடி பல்நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் வாகனங்களான பஸ், லொறி என்பவற்றை ஓட்டும் பொறுப்பும் இவரிடம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சியின் காரணமாக இச் சங்கத்தினர் புதிய பஸ்களை கொள்வனவு செய்யவும், அதற்கான சாரதிக்குரிய பயிற்சிகளையும் இவரே வழங்கியதாகவும் இச்சங்க ஊழியர்கள் கூறியதன் மூலம் அறியக்கிடைக்கின்றது.

இக்காலப்பகுதியில் இவர் பாடசாலை மாணவர்களின் கல்விச்சுற்றுலாவிற்காக இலங்கையிலுள்ள பல சுற்றுலா மையங்களுக்கு பாதுகாப்பாகவும், திருப்திகரமாகவும் அழைத்துச் சென்று வருவதனால் இப்பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகள் தமது சுற்றுலாவிற்கான சாரதியாக இவரைத் தெரிவு செய்வதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொள்ளுமளவிற்கு இவர் திறன்மிகு சாரதியாக விளங்கினார். இதற்கு சிறந்த உதாரணமாக கல்முனையிலிருக்கும் முஸ்லீம்

பாடசாலைக்கு தொடர்ச்சியாக 15 தடவைகளுக்கு மேல் சுற்றுலாவிற்கு சாரதியாக சென்றிருக்கின்றமை விசேட அம்சமாகும். சாரதியாக பல வருடங்கள் சேவையாற்றி இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய தூணாக இவர் விளங்கியதோடு தொடர்ந்தும் சிறிதுகாலம் பணிபுரிந்த பின்னர் இச்சங்கச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். இதன் பிற்பாடு களுதாவளை பதிதனில் வீற்றிருக்கும் சுயம்புலிங்கப் பிள்ளையாருக்காக தன்னை அர்ப்பணித்து விசுவாசத்துடன் இவ்வாலயத்தில் முழுமூச்சாக தனது சேவையினைச் செய்தார். இதன் விளைவாக ஆலய பரிபாலன சபையின் பேனாச்சி குடும்ப உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். சக அங்கத்தவர்களுடன் இணைந்து ஆலய கட்டிட நிருமாணப் பணிக்கு நிதி திரட்டி ஆலய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ததன் பலனாக இன்றும் பேனாச்சி குடும்ப மக்களின் நன்மதிப்புக்குள்ளானவராகத் திகழ்கின்றார்.

இத்துடன் இவரது சேவை நின்றுவிடாது களுதாவளை கிராமத்தில் கமநல அபிவிருத்தி சங்கத்தில் உறுப்பினராக இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக இக்கிராம விவசாய நடவடிக்கைகளை வெற்றிகரமாக்க பல திட்டங்களை வகுக்க ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கி அதில் வெற்றியும் கண்டார். அத்தோடு வேளாண்மைச் செய்கைகளிலும், ஏனைய பயிர்ச் செய்கை களையும் சிறப்பாக மேற்கொண்டு அதிக விளைச்சல் பெறுவதிலும், மற்றவர்கள் புகழ்ந்து பாராட்டும் வகையிலும் திறன்பட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதனை அறிந்த கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் இவரது இல்லத்திற்கு வருகை தந்து பயிர்ச்செய்கை முறைமை தொடர்பான நேர்காணல்களையும், கலந்து ரையாடல்களையும் மேற்கொண்டிருந்த நிகழ்வானது இவருக்கு மாத்திரமல்ல எமது கிராமத்திற்கும் பெருமை சேர்த்ததோர் விடயம் எனலாம். இதனை

“ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்”

எனும் குறளுக்கேற்ப இவரது செயற்பாடுகள் இவ்வூரில் விருட்சம் பெற்றிருந்தது.

சிறு வயதிலேயே தந்தையுடன் இணைந்து குடும்ப வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்ததன் காரணமாக அன்று தொட்டு இன்று வரை

தனது குடும்பத்தினருடனும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உறவுகளுடனும் அலாதியான அன்பும் பாசமும் கொண்டிருந்ததுடன் அவர்களுக்கு என்றும் ஒரு ஆலோசகராகவும், வழிநடத்துனராகவும் வாழ்ந்தார் என்றால் மிகையாகாது.

இவர் சிறு வயது முதல் கிராமமட்டத்தில் நடைபெறும் பல்வேறு கூத்துக்களைப் பார்த்து அதன் பால் கொண்ட ஈர்ப்பின் காரணமாக அக்கூத்துக்களில் வரும் பாடல்களை பாடி மகிழும் போது அதனை நேரில் கேட்கும் சந்தர்ப்பங்கள் மிக இனிமையானதாக இருக்கும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

எனும் திருக்குறளுக்கு அமைவாக பிறர் இவருக்கு கெடுதல் செய்தாலோ அவர் அதனை தெரிந்தும் தெரியா வண்ணமாக அவர்களுக்கு நன்மைகளை செய்து அவர்கள் வெட்கப்படும் படியான வாழ்வியலை கட்டமைத்துக் கொண்டவராக மிளிர்ந்தார்.

மனிதனாகப் பிறந்தவர்கள் நல்ல செயல்களை செய்வதனாலேயே மனித மனங்களில் என்றும் இடம்பிடிக்கின்றனர். எனினும் அந்த நல்ல செயல்களை செய்யும் வல்லமை ஒரு சிலராலேதான் முடியும். அப்படியான நல்ல செயல்களை செய்யும் உள்ளம் கொண்டவராக, மாணிக்கமாக, இரத்தினமாக மக்களிடையே தருமரெத்தினம் வாழ்ந்து காட்டினார். இன்று இவரது உடல் மறைந்து சென்றாலும் அவர் செய்த செயல்கள் ஒவ்வொன்றும் எம் கண்முன்னே என்றென்றும் நினைவலைகளாக ஓடிக்கொண்டே இருக்கும் இப்படிப்பட்ட நல்ல மனிதரை நாங்கள் தெய்வமாகவே போற்றுகின்றோம். இவரின் ஆத்மா இறைவனடி சேர எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ....... சாந்தி ....... சாந்தி......

இப்படிக்கு பாசத்துடன்
குடும்பத்தினர்.

# தங்கமான அண்ணன் தருமண்ணன்...

களுதாவளை மண்ணிலே தனித்துவம் பெற்ற எம் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக பிறந்து, எங்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக மதியுரைஞராக இறுதி நாள்வரை எம்முடன் வாழந்த எங்களின் தங்கமான அண்ணன் தர்மண்ணன்.....

இம் மண்ணிலே பெயரோடும், புகழோடும் வாழ்ந்த தம்பிப் பிள்ளை குடும்பத்தை மேலும் தலை நிமிர்ந்து நிற்க எங்கள் அப்பாவுக்கு பக்க துணையாக நின்று நல்ல பண்பாளராய் இறுதிவரை வாழ்ந்தவர் தரும அண்ணன்.

ஆடம்பரமாக வாழ்வதற்குரிய அத்தனை அம்சங்களும் நமது குடும்பத்தில் இருந்தும் ஆடம்பரமின்றி அனைவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக பொறுமையோடும், பக்குவத்தோடும், கண்ணியமாக எம்மை வழிநடத்தி எங்கள் அப்பாவுக்கு நிகரான தெய்வம் எங்கள் அண்ணன்.

விடாமுயற்சி, தன்னம்பிக்கை, விவேகம், வீரம் என அத்தனையும் உங்களிடத்தில் ஒருமித்து நின்றதனை கண்டு வியப்போம் அதனால்தானோ இறுதி வரை இளைஞனாக வாழ்ந்து விட்டு பிரிந்து சென்றார்.

எங்கு சென்றாலும் எம்மை பிறரிடம் அறிமுகம் செய்திட "கார்கார தர்மனின்" சகோதரிகள் என்று சொல்லி பிறரை புரிய வைக்க முகவரியாக உங்கள் நாமத்தை நாம் கூறிடுவோம். சொன்னதுமே உடனே உங்களுக்கு வழங்கும் மரியாதையை எமக்கும் வழங்கி கௌரவிப்பார்கள். அதிலும் சகோதர இனத்தவரும் விதிவிலக்கல்ல.

சிரித்த முகமும், பிறரைக் கவரும் வசீகரமான தோற்றமும், கபடமில்லாத மனமும் பிறரை மதித்து உதவி புரிந்திடும் உங்கள் செயலும்தான் மக்கள் செல்வாக்கு உள்ள மனிதனாக உங்களை நிலை நிறுத்தியது. பிறர் மனம் நோகாது நடக்க வேண்டும் என நீங்கள் எம்மிடம் கூறும் அறிவுரை இன்னும் காதுகளில் ஒலிக்கிறது அண்ணா..

எங்களை எல்லாம் காரிலே பின் இருக்கையில் அமரவைத்து அப்பாவுக்கு அருகிலே அமர்ந்து இருந்து திரையரங்கம், கோயில்களுக்கு அழைத்து செல்லும் அந்த நாட்கள் மனக்கண் முன்னே வந்து போகின்றது. அண்ணன் என்ற உறவையும் தாண்டி எமக்கு அப்பாவாக எம்மை ஆட்கொண்ட எங்கள் அண்ணன் தர்மண்ணன்

மண்ணில் பிறந்த மனிதன் என்றோ ஒரு நாள் மரணிப்பது உறுதி. இருந்தும் உங்கள் இழப்பை எம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எமது வம்சத்தின் விழுதுகள் பலவற்றை தாங்கி நின்ற ஆலமரம் ஒன்று திடீரென மண்ணில் சாய்ந்து மௌனித்து கொண்டது. இறைவனின் சித்து விளையாட்டில் அகப்பட்டு சிறகுடைந்த பறவைகளாக அழுது புலம்பி ஏங்கி தவிக்கின்றோம் அண்ணா...

விழியோரம் கண்ணீர் கசிய இக் கவியை உங்களிடம் சமர்ப்பித்து உங்களின் உடன் பிறப்புக்களாக நாம் பிறந்ததே எமக்கு கிடைத்த வரம் என எண்ணி உங்கள் நினைவுச் சுவடுகளோடு பயணிக்கின்றோம் அண்ணா....

அன்புச் சகோதரர்கள்

**சின்னத்துரை, முத்துகிருஷ்ணன்**

**கிருபைநாயகி, சபாநாயகி, அருளம்மா, சாந்தினி**



# அன்பு மாமாவே !

அன்பு மாமாவே எங்கள் நெஞ்சில் உறைபவரே !
உங்கள் பண்பின் பதிவுகளால் எங்கள் உள்ளம் புகுந்தவரே !
வான் திறந்த வெள்ளம் போல் வார்த்தை பேசி
தேன் சுரந்த மலர் போல அழகாக சிரிப்பீர்கள்
கபடமற்ற சிரிப்பினால் கட்டிவிட்டீர் எங்களை.

லீவுகளில் வீடு வந்தால் பல கதைகள் சொல்வீர்கள்,
பாவனையும் காட்டி பாரதக் கூத்து முதல் பலபல நாடகங்கள்
பாடியும். ஆடியும் காட்டி எங்களை மகிழ்விப்பீர்கள் - உங்கள்
பாவனை யாவையும் இனி எங்கு காண்போம் மாமா...!

"பொறுமை" என்றால் தருமர் என்று பாரதம் கூறும் - இன்று
"கார்" என்றால் தரும மாமா என்று உங்கள் சரித்திரம் கூறும்
சிறு வயதில் வடம் பிடித்தீர் சீரிய வாழ்வு கண்டீர்
செல்வத்தின் உச்சியில் குடும்பத்தினை உயர்த்தினீர்களே மாமா.

சுற்றுலா செல்வதென்றால் தருமர் மினி பஸ்தான் - அதில்
கல்வியென்றும் கலையென்றும் பல சுற்றுலாக்கள் கூட்டிச் செல்வீர்கள்
நம்பிக்கையின் விம்பமாகத் திகழ்ந்த உங்களை
அனைவருமே "தருமண்ணர் " என்றே அழைப்பார்களே - மாமா

பூக்களின் பெருமையெல்லாம் அதன் மணத்தைக் கொண்டே
உங்கள் சேவைகளின் பெருமை யாவும் அவரவர்
மனங்களில் என்றென்றும் மணம் வீசும் மாமா
கடந்துவிட்ட பாதையெல்லாம் கனிவாக இருந்தாலும்
பிரிந்து விட்ட அடிச்சுவடு சுமையாக இருக்கின்றதே......!
உடலோ அழிந்து சென்றது ஆனால் - உங்களிடம் கொண்ட
அன்பும் இனிமையான நினைவுகளும் என்றென்றும்
எங்களுடன் அழியாது நிலைத்திருக்கும் அன்பு மாமா...!

அன்பு மருமக்கள்
**சுஜீடா, திலக்மன், சுனந்தா, சர்ஜீன், கமித்திரன்,
பிருந்தன், வித்யா, சுஜந்தன்.**

# எல்லோராலும் விரும்பப்பட்ட தருமன்

அமரத்துவமடைந்த தம்பிப்பிள்ளை தருமரெத்தினம் அவர்கள் எல்லோரிடமும் அன்பாக பழகும் பண்புகொண்டவர். இவரை வயதில் குறைந்தவர்களும் கார்க்கார தருமன் என்றே விழிப்பர். இவர் எந்நேரமும் புன்னகை பூத்த முகத்துடன் இருப்பார். இதனோடு எவரைக் கண்டாலும் உறவுமுறை சொல்லி உறவாடும் சுபாவம் மிக்கவராகவும் விளங்கினார்.

இவர் ஒரு சமூகத்தொண்டராவும் செயற்பட்டவர் ஆவார். இவர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இணைந்து அதனூடாக எமது கிராமத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பங்குகொண்டவர். இதனோடு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வாயிலாக கல்வி வளர்ச்சிக்கும் பங்காற்றியவர். இவ்வாறு பல்வேறுபட்ட சமூகப்பணிகளை புரிந்ததுடன் இக் கிராமத்திலுள்ள ஆலயங்களுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்ததோடு ஆன்மீகப் பணிகளும் செய்தமை குறிப்பிடத்தகக்து. இவர் தான் சார்ந்த குடும்பம் சார்பாக பிள்ளையார் ஆலய பரிபாலனசபை உறுப்பினராகவும் செயற்பட்டவர் ஆவார்.

அமரர் அவர்கள் தமது உற்றார் உறவினர்களுடன் பற்றுதல் கொண்டவராகவும் செயற்பட்டமையை காணமுடிந்தது. இவரது வம்சத்தில் மூத்தவராகக் காணப்பட்டமையால் மதிக்கத்தக்க ஒருவராகவும் விளங்கினார். இவர் ஆரம்பகாலத்தில் " கார் " வைத்திருந்த வேளையில் இரவு பகல் பாராது எந்த நேரத்திலும் சேவை புரிந்தமையால் சிறப்பான ஒருவராகக் கருதப்பட்டார்.

அமர வாழ்வு பெற்ற தம்பிப்பிள்ளை தருமரெத்தினம் அவர்களது இழப்பு என்பது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். மேலும் இவரின் பிரிவால் கவலைகொண்டுள்ள குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் சுற்றத்தார் துயரிலிருந்து விடுபடவும் அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெறவும் எல்லாம் வல்ல களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி .. சாந்தி ... சாந்தி ....

**கா. வேலாயுதபிள்ளை**

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் ஓய்வுநிலை நிருவாக உத்தியோகஸ்தரும்.

# மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்த சாரதி

களுதாவளை கிராமத்தில் எத்தனையோபேர் சொந்த வாகனம் வைத்துள்ளனர், வாகன சாரதிகளாக கடமையாற்றுகின்றனர். ஆனால் "கார்கார தருமரெத்தினம்" என்று அடைமொழியால் சிறப்பிக்கப்படுபவர் ஒருவரே ஆவார். அவர்தான் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தருமரெத்தினம் அவர்கள்.

அமரரின் தந்தையார் தம்பிப்பிள்ளை அவர்கள் எமது சுரக்கா மூர்த்தி குடும்பத்தின் வழித்தோன்றல். அவரிடம் உழவு இயந்திரம் இருந்த காரணத்தினாலும் அவரது புதல்வர் தருமரெத்தினம் சாரதியாக இருந்த காரணத்தினாலும் ஆலயத்தில் சுரக்காமூர்த்தி குடும்பத்தின் திருவிழா, திருவாதிரை தீர்த்தம் என்பவற்றுக்கு அவர்களது உழவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இந்த வகையில் சுரக்காமூர்த்தி குடும்பத்திற்கும் தருமரெத்தினம் அவர்களுக்கும் மிக நீண்ட தொடர்பு காணப்பட்டது.

களுதாவளை மகா வித்தியாலயத்தில் நான் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் தருமரெத்தினம் அவர்கள் மினி பஸ் உரிமையாளராகவும் பஸ் சாரதியாகவும் கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் பாடசாலைகளின் பல சுற்றுலாக்களில் ஒன்றாக செயற்பட்டுள்ளோம். அச் சந்தர்ப்பங்களில் எமது மாணவர்களுக்கு அதிகளவிலான இடங்களை மாணவர்கள் பார்ப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார். இந்த வகையில் அவர் ஒரு சாரதியாக மட்டுமன்றி சுற்றுலா வழிகாட்டியாகவும் செயற்பட்டார்.

சமூக அபிவிருத்தியிலும் அக்கறை கொண்ட ஒருவராக தருமரெத்தினம் அவர்கள் செயற்பட்டார். ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாயின் கல்வி அபிவிருத்தி மிகவும் முக்கியமானதாகும். அதிலும் நவீன காலப்பகுதியில் விஞ்ஞானக் கல்வி முன்னேற்றமடைய வேண்டும். இந் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காகவே களுதாவளை மகா வித்தியாலயத்தில் உயர்தர விஞ்ஞானப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஆரம்பகாலப்பகுதியில் இப் பரீட்சார்த்த முயற்சியில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்த பெருமளவான பெற்றோர்கள் முன்வரவில்லை. எனினும்

துணிச்சலுடன் தனது புதல்வியினை விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க வைத்தார். இதன் பேறாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். எனினும் நாட்டுச் சூழல் காரணமாக அத்துறையினை அவரால் தொடரமுடியவில்லை.

இறைபக்தி மிக்கவராகவும் சமய தொண்டராகவும் செயற்பட்டார். குறிப்பிட்ட காலம் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பேனாச்சி குடும்பத்தின் சார்பாக பரிபாலன சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார். அக் காலப்பகுதியில் பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி அவற்றின் வெற்றிக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

எல்லோருடனும் சிரித்த முகத்துடன் அன்பாக பழகும் தருமரெத்தினம் அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் அப்பிரிவுத் துயரிலிருந்து மீள்வதற்கு எல்லாம்வல்ல சுயம்புலிங்கப் பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டுமென்று இறையாசியை வேண்டி நிறைவு செய்கின்றேன்.


## வ. கனகரெத்தினம்

சுரக்காமூர்த்தி குடும்ப கௌரவ வண்ணக்கர்
களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்.




# மனிதம் நிறைந்த பண்பாளர்.

அமரர் தருமரெத்தினம் அவர்கள் களுதாவளை கிராம மக்களுடன் அன்பாக நேர் மனப்பாங்குடன் பழகும் ஒருவர். நல்ல மனப்பாங்கு கொண்ட இவர் மனிதநேயமிக்க மனிதம் நிறைந்த பண்பாளர். இவரது இழப்பு எங்கள் சமூகத்துக்கு பேரிழப்பாகும்.

பிறந்தவர் கட்டாயம் இறப்பை சந்தித்தே ஆக வேண்டும், இது இயற்கையின் நியதி. ஆனால் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் இவ் உலக வாழ்வில் ஒரு மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதே ஒரு சமூக எதிர்பார்ப்பாகும். இந்த வகையில் அமரர் தருமரெத்தினம் அவர்கள் தனது உயர்வான சிறந்த நற்பண்புகளை வெளிப்படுத்தி சமூக நலன் சார் செயற்பாடுகளில் நாட்டம் கொண்டு மக்கள் மனங்களில் தனி இடம் பிடித்தவர். அறிஞர் அப்துல்கலாம் "பிறப்பு என்பது தற்செயல் நிகழ்வாக இருக்கலாம் ஆனால் இறப்பு சரித்திரம் படைத்ததாய் இருக்க வேண்டும்" என்றார். இவர் கூற்றுக்கு இணங்க அமரர் தருமரெத்தினம் அமரத்துவம் அடைந்தாலும் இறந்த பின்பும் அவர் சாதனைகள் சரித்திரங்களாய் அமைகின்றது.

அமரர் அவர்கள் மனித நேயம் மிக்கவர். அனைவரிடத்திலும், அன்பாகவும், இன்முகத்துடனும், இனிப்பாகவும், கனிவாகவும், கதைக்கும், பழகும் பண்பு அவரிடத்தில் நிறையவே காணப்பட்டது. இன, மத, மொழி, பிரதேச வேறுபாட்டு உணர்வுகள் அவரிடம் ஒரு போதும் இருந்ததில்லை. வந்தாரை வரவேற்று உபசரிக்கும் பண்பாளர். அயல் கிராம மக்களுடன் தோழமையான உறவினை வைத்திருந்தார்.

களுதாவளை கிராமத்தின் முன்னேற்றத்திற்காக முன்னின்று உழைத்தவர், களுதாவளை மரபு வழியில் தனித்துவம் மிக்க குடும்பமான எமது பேனாச்சி குடும்பம் சார்பாக களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையில் முதன்மை உறுப்பினராக இருந்து மிக நீண்ட காலம் சேவையாற்றியஆன்மீகத் தொண்டன். இவரின் நேர் வழியில், அவரது மருமக்களும் நேர்மையாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

களுதாவளைக் கிராமத்தில் முதல்முதலில் கார் உரிமையாளர் என்ற பெருமையும், முறையான சாரதியாகவும் இருந்து புகழ் பெற்றவர்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்பதற்கு இணங்க அவரது பிள்ளைகள் சமூகத்தில் மதிக்கதக்க உயர்நிலையில் இருப்பதைக் காணலாம். ஆலமரம் சாய்வதில்லை அதன் விழுதுகள் அதனைச் சாய விடாது தாங்கிக் கொள்ளும். இதைப் போல் அவரது பிள்ளைகள் மனிதம் நிறைந்த பண்பாளர் அமரர் தருமரெத்தினம் அவர்களின் பணியினைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எனது சார்பிலும், பேனாச்சி குடும்ப மக்கள் சார்பிலும், ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## இ.வ.அருணகிரிநாதன்

கௌரவ வண்ணக்கரும் சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையின் உப செயலாளரும்.



# நினைவலைகளை மீட்டிப் பார்க்கையிலே......

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரை மனதிலே முன் நிறுத்தி தம்பிப்பிள்ளை தருமரெத்தினம் என்ற பதிவுப் பெயர் கொண்டவரும் "கார்க்கார தருமர்" என உறவினர்களாலும் நண்பர்களாலும் ஊரவர்களாலும் செல்லமாகவும் சிறப்பாகவும் அழைக்கப்பட்டு 77 அகவைகளாக மண்ணுலகில் வாழ்ந்து இறைவன் திருவடி நிழலை அடைந்த உத்தமர் தருமரெத்தினம் அவர்களின் நினைவு அஞ்சலிக்காக நினைவலைகளை மீட்டிப் பார்க்கின்றேன்.

அமரர் தருமரத்தினம் அவர்கள் களுதாவளையிலே பிரசித்தி பெற்ற குடும்பத்திலேயே பிறந்து, பிரசித்தி பெற்ற குடும்பத்திலேயே திருமணம் முடித்து, பெருமையோடு வாழ்ந்தவர். சுரக்காமூர்த்தி குடும்பத்தில் பிறந்த இவரது தந்தையார் அவர்கள் மண்முனை தென் எருவில் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராக சேவையாற்றியவர். மாணிக்கம் அவர்களை திருமணம் முடித்து ஆண்கள் நால்வரும் பெண்கள் நால்வருமாக எட்டுப்பிள்ளைகளின் மூத்தவராக தருமரெத்தினம் அவர்கள் பிறந்தார். இளமையிலே களுதாவளை இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில் கல்வி பயின்ற அமரர் தருமரெத்தினம் அவர்கள்; வெள்ளை மனமும், பிள்ளைக் குணமும், அடக்கமும், ஒழுக்கமும், அன்பும், பண்பும் நிறைந்தவராக வாழ்ந்தார். பிறரிடம் சாந்தமாகவும் மரியாதையோடும் மதிப்போடும் பழகியவர்.

பேனாச்சி குடும்பத்தின் பெறுமதி வாய்ந்த ஒருவராக இவர் கருதப்பட்டார். இவரது நல் இயல்புகளை அறிந்து கொண்டே பேனாச்சி குடும்ப மக்கள் அமரர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் வண்ணக்கர் அவர்களின் பதவிக்காலம் முடிவுறுத்தப் பட்டமையால் புதிய வண்ணக்கராக்க அமரர் தருமரெத்தினம் அவர்களே பொருத்தமானவர் என்று அவரை அணுகிய போது அவர் தன்னுடைய அப்பாவின் தம்பியான சுந்தரப்பிள்ளை அவர்களின் மகனான கிராமசேவை அலுவலகராக பதவி வகித்த கனகசூரியம் அவர்களை சமிக்ஞை காட்டினார். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார். துணிகரமான செயற்பாடுகளை கனகசூரியம் வண்ணக்கர் மேற்கொண்டார். அவரது சேவை பாராட்டுக்குரியது. இன்றும் அது நினைவு கூரப்படுகின்றது.

அவருக்குப் பின்னால் அமரர் தருமரெத்தினம் அவர்களின் மருமகனாகிய வேலாயுதப்பிள்ளை குணாளன் (ஆசிரியர்) இருமுறை பேனாச்சி குடும்பத்தின் கௌரவ வண்ணக்கராக நியமிக்கப்பட்டு சிறந்த சேவையாற்றி வருகின்றார்.

அமரர் தருமரெத்தினம் அவர்களுக்கு கார், உழவு இயந்திரம், பார ஊர்தி, நீண்ட தூர பேரூந்து முதலியவைகளை ஓட்டத் தெரியும். அதனாலேதான் மண்முனை தென் எருவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பார ஊர்தி சாரதியாகவும் நீண்ட தூர பேரூந்து சாரதியாகவும் அரும்பெரும் சேவையாற்றியுள்ளார். பிற்பட்ட காலத்தில் போட் உழவு இயந்திர சொந்தக்காரராகவும் சாரதியாகவும் கடமையாற்றினார். ஆனால் "கார்க்கார தருமன்" என்று சொன்னாலே அவரது உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அயல் ஊரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இவரது திறமையையும், பண்பையும் அவதானத்தையும் நன்றாக அறிந்து கொண்டவர்களான பயணிகளும் இவருடைய பேரூந்திலே பயணிப்பதையே விரும்பினர். விசேடமாக சுற்றுலா செல்லும் மன்றங்கள், பாடசாலைகள் "கார்க்கார தருமருடைய" பேரூந்திலேயே பயணிக்க விரும்பினர். பாதுகாப்பான பயணத்துக்கு உரியவராக அமரர் தருமரெத்தினம் விளங்கினார்.

இவருடைய இல்வாழ்க்கைக்கு உதவியாக இருந்த இரத்தினம்மாவின் பெரியப்பாவாகிய பெரியதம்பி கணபதிப்பிள்ளை களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பேனாச்சி குடும்ப கௌரவ வண்ணக்கராக சேவையாற்றினார். சிறிய தந்தையான பெரியதம்பி கிருஷ்ணபிள்ளை (விஷவைத்தியர்) களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் உரிமையாளரும் ஸ்தாபகருமான கதிரேசு சின்னத்தம்பி சாமியார் என்பவரால் எழுதப்பட்ட உறுதி சாசனத்தில் பேனாச்சி குடும்பத்தின் சார்பில் கௌரவ வண்ணக் கராக முதன்முதலாக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. அதனாலேதான் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் பேனாச்சி குடும்ப நிருவாக சபை உறுப்பினராக அமரர் தருமரெத்தினம் சேவையாற்றினார். பெயருக்கு ஏற்றாற் போல் தனது உற்றார் உறவினருக்கோ, குடும்பத்தவர்களுக்கோ, ஊரவர்களுக்கோ இழப்பு ஒன்று ஏற்பட்டால் அதனைத் தட்டிக் கேட்பதற்கு முன் நின்றவர்.

அமரர் தருமரெத்தினம் அவர்கள் பிரபலமான நாட்டுக் கூத்துக் கலைஞரும் களுதாவளை விவசாயக் குழுவின் உறுப்பினரும் ஆவார்.

ஆசைக்கொரு மகனும் ஆஸ்திக்கு ஒரு பெண்ணுமாக இரண்டு பிள்ளைகளைப் பெற்று பெருமையோடு வாழ்ந்தார். இவரது பிள்ளைகள் இவரைப் போன்று நல்ல ஒழுக்கமும் பண்பும் கொண்டவர்கள். திரு.த.ஜெயராஜ் வங்கியிலும் செல்வி. த.இந்துஜா ஆசிரியையாகவும் பணியாற்றுகின்றனர். இவர்களது முயற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அமரர் தருமரெத்தினம் அவர்களும் அவரது துணைவியாருமே ஆவார்கள். இவரது இழப்பு இவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் பேரிழப்பாகும். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு வார்த்தைகள் இல்லை.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

என்ற தெய்வப்புலவர் குறளுக்கு ஏற்ப வாழ்ந்து இறையடி சேர்ந்த “கார்க்கார தருமருக்கு” என் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியையும் ஆறாத்துயரில் மூழ்கியுள்ள அவரது மனைவி பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஊரவர்களுக்கும் பேனாச்சி குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இந்த அருமையான வாய்ப்புக்கு இறைவனுக்கும் இந்த மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் எனது மனமானர்ந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
(முன்னாள் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய தலைவர்).

# என் மனம் கவர்ந்த உடன்பிறவா சகோதரன்

அமரர் அவர்களை தருமன் என்று செல்லமாக அழைப்பார்கள். ஆனால் அவரின் பெயர் தருமரெத்தினமாகும். தருமபிரானின் குணாதியங்கள் அவரிடம் காணப்பட்ட காரணமாகத்தான் அவரை தருமன் என்று அழைத்தார்களோ என்று நான் வியந்ததுண்டு. அவர் எனக்கு என்றும் தருமனாகத்தான் இருந்தார்.

இளம் வயதிலிருந்தே அமரரை நான் நன்கு அறிவேன். அவர் எம் பதியில் மிகவும் மதிக்கப்படுகின்ற கௌரவமான சிறப்பான குடும்பத்தில் உதித்தவர். இவர் தந்தையார் தம்பிப்பிள்ளை வேலாப்போடியாரின் மூத்த மகனாவார். சகல வளங்களும் நிறைந்த குடும்பம். இவர் அனைவரிடமும் அன்பாகவும், அமைதியாகவும் எதுவித ஆர்ப்பரிப்புமில்லாமல் பழகும் பண்பாளன். எனது தந்தையாருக்கும் அவருக்கும் நெருங்கிய உறவிருந்தது. வேலாப்போடியாரோடும் தந்தையாருக்கு அன்னியோன்யமிருந்தது. புதிர் உண்ணல் மற்றும் நல்ல நிகழ்வுகள் நடைபெறும் நாட்களில் எங்கள் வீட்டுக்கு வந்து அப்பாவை அழைத்துச் செல்வார். அமரர் தம்பிப்பிள்ளை அவர்களும் அவ்வாறே நடந்து கொண்டார். இத்தகைய பின்னணியுடையவர் தான் தருமன்.

களுதாவளைக் கிராமத்தில் முதல் முதல் உழவு இயந்திரத்தையும், கார் ஒன்றையும் அறிமுகப்படுத்தியவர் இவரின் தந்தையார். இவ் வாகனங்கள் அவர்கள் தேவைக்கு மாத்திரமின்றி மக்களின் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டது. அக்கால கட்டத்தில் இத் தேவை இன்றியமையாத தாயிருந்தது. இச் சேவையை திறம்பட செய்தவர் அமரர் தருமன்தான். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் அமைதியாகவும் எளிமையாகவும் பழகுகின்ற பண்பாளன். இதன் காரணமாக பலருக்கும் பிரதியுபகாரமின்றி தொழிற்பட்டதை நான் நன்கறிவேன்.

அமரர் அவர்களை பொது விடயங்களில் அவரை ஈடுபடுத்துவதில் நான் அக்கறையுடனிருந்தேன். அவரை கமநல

அமைப்பில் ஈடுபடுத்தி நானும் அவரும் நிருவாக உறுப்பினராயிருந்து சில காலம் சேவையாற்றியுள்ளோம்.

சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் அவர்களின் குடும்ப சார்பில் நிருவாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சேவையாற்றியுள்ளார். எனது நம்பிக்கைக்குரிய சகோதரனாக சிறந்த நண்பனாகத் திகழ்ந்தார். எப்பொழுதும் என்னை கௌரவிக்க வேண்டுமென்பது அவரின் பெருவிருப்பமாகவிருந்தது. அண்மைக் காலத்தில் அவருடைய மைத்துனரின் மரணச் சடங்குக்கு சென்ற பொழுதும் 31ம் நாள் நிகழ்வுக்கு சென்ற போதும் என்னை முன் நின்று அழைத்து உபசரித்தார். அவ்வேளை சில விடயங்களைப் பற்றிக் கருத்து பரிமாறிக்கொண்டோம் இந்நிகழ்வின் பின் நான் அவரைச் சந்திக்கவில்லை. நான் வீட்டிலிருக்கும் பொழுது தருமனுக்கு சுகமில்லை என்று கேள்விப்பட்டேன். உடனடியாக வீட்டுக்கு அவரைப் பார்க்கச் சென்றேன். அவர் கொழும்பில் என அவர் துணைவியார் கூறினார். அவரிடமும் அவரின் மைத்துனருடனும் அளவளாவி பல விடயங் களையும் அறிந்து கொண்டேன். அவரைச் சந்தித்து பேசவேண்டு மென்று அவாப்பட்டேன். அவருடன் பேசுவதென்பது ஒரு மகிழ்ச்சி கரமான விடயம். எமக்கு எந்த தொந்தரவும் கொடுக்கக் கூடாது என்பது அவரின் கொள்கை. கொழும்பிலிருந்து வந்ததும் சந்திப்போம் என்று வீடு திரும்பினேன். பின்னர் கொழும்பிலிருந்து திரும்பி வந்து விட்டாரென அறிந்து வீடு சென்றேன். அவரை அன்று மட்டக்களப்புக்கு கொண்டு சென்று விட்டார்களென அறிந்து வேதனைப்பட்டேன். அவர் காலமாகி சில நாட்களுக்கு பின் நான் அறிந்தேன் நான் அவரைப் பார்க்க சென்ற செய்தி அவருக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தப்பட்டது. இத எனக்கு ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. அமரரின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றேன்.

## தன்மன்பிள்ளை கனகசபை

சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கர்,
பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்.

# ‘ படைமுகத்திலும் அறிமுகம் வேண்டும் ’

## – தருமண்ணனின் அறிமுகத்தால் காப்பாற்றப்பட்ட நாங்கள் –

எங்கள் குடும்பத்தின் மூத்த வாரிசு தருமண்ணன்தான். எங்கள் அப்பாவும் தருமண்ணனின் அப்பாவும் அண்ணன் தம்பிகள், அதுபோல் எங்கள் அம்மாவும் தருமண்ணனின் அம்மாவும் அக்கா தங்கைகள் இதனால் சாதாரண பெரியம்மா, சின்னம்மா அல்லது பெரியப்பா, சின்னப்பாவின் பிள்ளைகளுக் கிடையிலான உறவை விட எங்களுக்கிடையிலான உறவு மிக நெருக்கமானது. அந்த நெருக்கத்தை கடைசிவரை கட்டிக்காத்துப் பேணியவர் தருமண்ணன்தான். இக்காரணத்தினால்த்தான் எங்கள் குடும்பத்தின் மூத்த வாரிசு தருமண்ணன் எனக் குறிப்பிட்டேன்.

எங்கள் முகச் சாயலைக் கொண்டு கனகசூரியத்தின் தம்பியா? அல்லது அரசனின் தம்பியா? என்று கேட்பதிலும் பார்க்க “கார்க்கார” தருமனின் தம்பியா எனக் கேட்பவர்கள் அதிகம். இவ்வாறு எங்களுடைய தோற்றமும் குரலும் ஒரே தன்மையாய் இருந்தன. 1990 கள் வரை இந்த பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் தருமண்ணனைத் தெரியாதவர்கள் இல்லை. அந்தளவுக்கு தருமண்ணன் அறியப்பட்டவராக இருந்தார். அதற்குக் காரணம் அவர் மற்றவர்களுடன் கனிவாகப் பேசுகின்ற முறையும் ஆபத்து நேரத்தில் இரவு எத்தனை மணிக்கு போய்க் கூப்பிட்டாலும் அவர் “ஏலா”, என்று கூறாது உடனே வெளிக்கிட்டு காரை எடுத்து அவர்களை அழைத்துச் சென்று அந்த பிரச்சினையை முடித்துக் கொடுப்பதினாலும் ஆகும். அந்தக்காலத்தில் போண் வசதிகளோ தற்காலத்தைய ஓட்டோ வசதிகளோ இருக்கவில்லை. களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு செட்டிபாளையம் போன்ற கிராமங்களுக்கெல்லாம் அவசரத்துக்கு ஓடுகின்ற ஒரே ஒரு கார் தருமண்ணனின் கார்தான் என்பது இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தெரியாது. 1970 களுக்கு முன்பு சாதாரண துவிச்சக்கர வண்டி வைத்திருந்தவர்கள் தற்போது கார் வைத்திருப்பவர்கள் போல் எண்ணிச் சொல்லக் கூடியளவுக்குத்தான் இருந்தது. பெருமளவானவர்கள் படுவான்கரைக்குக் கூட நடையில்தான் போய்வருவார்கள். அவ்வாறான நிலையில் வாடகைக்கு கார் ஓடினாலும் கார் வைத்திருப்பவராகவும் அன்பும் கனிவும் கொண்டவராகவும் எல்லோராலும் அறியப்பட்டவராகவும் தருமண்ணன் இருந்தார். இவ்வாறு அறியப்பட்டவருடைய சகோதரர்களாக எங்களை அடையாளம் கண்டு “நீ கார்கார தருமண்ட சகோதரரா” எனக் கேட்பது உண்மையில் எங்களு மிக்க சந்தோசத்தைத் தந்தது.

தருமண்ணன் எங்களை தனது சொந்தச் சகோதரர்களாகப் பார்த்தார் என்பதற்கு சில சம்பவங்களைக் குறிப்பிட வேண்டும்.

1987ம் ஆண்டு இந்திய இராணுவம் புளட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய இயக்கங்களை ஒன்றிணைத்து 'திறி ஸ்ரார்' எனும் ஓர் ஆயுத அணியை புலிகளை அழிப்பதற்காக உருவாக்கியது. அவர்கள் இந்திய இராணுவத்துடன் இணைந்து புலிகளை வேட்டையாடினர். எனது அண்ணனான குணம் புலிகளுடன் தொடர்பைப் பேணி அவர்களுடன் உறவாக இருந்த காரணத்தினால் அவனும் இந்த 'திறி ஸ்ரார்' ஆயுதக் குழுவால் தேடப்படுபவனாக இருந்ததினால் தலைமறைவாகவே இருந்து வந்தான். 1988ம் ஆண்டு செட்டிபாளையம் விளையாட்டு மைதானத்திலே ஒரு விளையாட்டுப் போட்டி நடப்பதைப் பார்ப்பதற்காக நானும் சென்றிருந்தேன். விளையாட்டுத் தொடங்கி சிறிது நேரத்தில் விளையாட்டு மைதானத்தை இந்திய இராணுவம் சுற்றி வளைத்தது. புலிகள் விளையாட்டுப் பார்க்க வந்தவர்களாம் அவர்களைப் பிடிப்பதற்காகத்தான் இந்தச் சுற்றி வளைப்பு என்று கதைக்கத் தொடங்கி சிறிது நேரத்திலேயே ஒவ்வொருத்தராக அடித்து கைகளைக் கட்டிக் கொண்டுவந்து மைதானத்தின் மத்தியில் நிறுத்தினார்கள். என்னை குணண்ணன் என நினைத்து இரண்டு தடவை என்னையும் சனக் கூட்டத்திலிருந்து எழுப்பி மைதானத்தின் மத்திக்கு கொண்டு சென்றார்கள். இரண்டு தடவையும் நான் குணமில்லை யோகன் என்பதை செட்டிபாளையத்தைச் சேர்ந்த புளட் உறுப்பினர் கார்த்திக் என்பவர் என்னை விடுவித்து விட்டார். நானும் புளட் இயக்கத்தில் சேர்ந்து பின்பு அதிலிருந்து விலகியிருந்தேன் என்பது கார்த்திக்குக்குத் தெரியும். அதனால் நான் தப்பித்துக்கொண்டேன். அந்த நேரத்தில்தான் தெரியும் குணண்ணனும் இந்த விளையாட்டுப் பார்க்க வந்திருக்கின்றான் என்பதும் அவனையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும். ஆனால் குணண்ணன் நீண்ட நேரமாக பிடிபடவில்லை. நான் நேராத சாமி இல்லை. "கடவுளே குணண்ணன் பிடிபட்டுவிடக் கூடாது" என்று, இருந்தும் எனது நேர்த்தி பலிக்கவில்லை. கடைசிநேரத்தில் குணண்ணனை கையைக்கட்டி அடித்து மைதானத்தின் மத்திக்கு கொண்டு வந்தார்கள். ஒரு வீட்டின் சமையலறைச் சிமிலிக்குள் ஒளித்திருந்த போது பிடிபட்டதாக பேசிக்கொண்டாாகள்.

குணண்ணன் பிடிபட்டு சிறிது நேரத்தில் அனைவரையும் இந்திய இராணுவத்தின் லொறியில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார்கள். இரண்டு மூன்று நாட்களின் பின் காரைதீவு இந்திய இராணுவ முகாமில் குணண்ணன் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிந்து நானும் கனகசூரியண்ணனும் குணண்ணனைப் பார்ப்பதற்காக காரைதீவு முகாமுக்குச் சென்றோம். அங்கு கனகசூரியண்ணனை மட்டும் உள்ளே எடுத்து "சில நாட்களின் பின் விடுவித்து விடுவோம் அப்போது சொல்லியனுப்புகின்றோம் வாருங்கள்" எனக் கூறி அனுப்பிவிட்டார்கள். குணண்ணனைக் காட்டவேயில்லை. ஆனால் அவனை விடுவார்கள் அவன் பயிற்சி எடுத்த புலி இல்லைத்தானே என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. இப்படி நாங்கள் காரைதீவுக்குச் சென்று மூன்று நான்கு நாட்கள் கடந்திருக்கும் ஒரு நாள் நான் காலை நேரம் பிரதான

வீதியினால் சைக்கிளில் (சாதாரண துவிச்சக்கர வண்டி) சென்று கொண்டிருக்கும் போது எதிரே ஒரு இந்திய இராணுவ லொறி ஒன்று களுவாஞ்சிகுடிப் பக்கத்திலிருந்து தேற்றாத்தீவு பக்கம் நோக்கி வருவதை அவதானித்தேன். அந்த லொறி என்னைக் கடக்கும் போது "ஆனையோ" (அவன் என்னை அப்படித்தான் அழைப்பதுண்டு) என்று குணண்ணன் கத்திக் கொண்டு செல்வதைப் பார்த்து சைக்கிலைத் திருப்பி லொறிக்குப் பின்னால் என்னால் முடிந்தவரைக்கும் ஓடிப்பார்த்தேன். அதனுடைய வேகத்துக்கு என்னால் மிதிக்க முடியுமா? லொறி என் கண்ணில் இருந்து மறைந்து சென்று விட்டது. நான் சைக்கிளைத் திருப்பி வீட்டுக்கு ஓடிப் போய் லாலக்காவிடம் (லலிதா) குணண்ணனை ஏற்றிக் கொண்டு போகிறார்கள். "வாங்கோ போய்ப் பார்ப்பம் சிலவேளைகளில் செட்டிபாளைய மைதா னத்துக்குத்தான் கொண்டு செல்கிறார்களோ தெரியாது" என்று கூறி அவவையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செட்டிபாளையம் நோக்கிச் சென்றோம். மாங்காட்டினால் போகும் போதே "கொண்டுசென்றவர்களை வெட்டுவதற்காக செட்டிபாளைய கண்ணகியம்மன் ஆலைய வீதியினால் ஆத்தங்கட்டுக்குக் கொண்டு செல்கின்றார்கள்" என்ற பேச்சு அடிபடத் தொடங்கி விட்டது. நாங்கள் செட்டிபாளையத்துக்குச் சென்று பார்த்தபோது அம்மன் கோயில் பக்கம் எவரும் செல்ல முடியாதவாறு ஆயுததாரிகளால் தடுக்கப் பட்டிருந்தது. இருந்தும் ஒவ்வொரு வீதியிலும் காவலுக்கு நின்றவர்களிட மெல்லாம் எங்களை போய்ப் பார்ப்பதற்கு அனுமதிக்குமாறு கெஞ்சிக் குளறிக் கேட்டுக் கேட்டுத் திரிந்தோம். எவருமே எங்களை அந்தப் பக்கமும் அனுமதிக்கவில்லை. கடைசியாக குருக்கள்மடத்து முருகன் கோயில் பக்கத்திலுள்ள காட்டுக்குள்ளால் போய்ப் பார்ப்பம் என்ற எண்ணத்துடன் முருகன் கோயில் வாசலுக்கு எதிரே சைக்கிளை நிறுத்திவிட்டு வீதியைக் கடக்க எத்தனித்த போது ஒரு வெள்ளைக்காரில் ஜனா (கோ.கருணாகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றத் தேர்தல் 2020 இன் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமாக இருப்பவர்) வந்து இறங்கி அக்காவைத் தள்ளி விட்டுவிட்டு, எனக்கு இரண்டு மூன்று அறையறைந்து விட்டு வீட்டுக்குப் போகும்படியும் இல்லாவிட்டால் சுட்டுக் கொன்று விடுவதாகவும் கூறித் துரத்தி விட்டான். (எனக்குத்தான் அடித்தது என்பது இன்றுவரை ஜனாவுக்குத் தெரியாது, ஆனால் அவர் என்னை நன்கு அறிவார் கண்டதும் சிரித்துக் கொள்வோம். பகைமையினால் மனம் நிம்மதியை இழக்கும், அன்பினால் மனம் நிம்மதி யினைப் பெறும் என்பது நான் கண்ட உண்மை) நாங்கள் அழுது கத்திக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அதன் பின் பி.ப. 2.00 மணியளவில் "வெட்டக் கொண்டு சென்ற குணண்ணன் தப்பி ஓடி விட்டானாம்" என்ற தகவல் கசிந்தது. சாவீடு போல எல்லாரும் லாலக்கா வீட்டில்தான் கூடியிருந் தோம். எங்களுக்கு என்னவென்றாலும் தருமண்ணரும் எங்களுடன்தான் இருப்பார். அன்றும் அவர் எங்களுடன்தான் இருந்தார்.

கலந்து பேசி மீண்டும் செட்டிபாளையப் பக்கம் போய் குணண்ண னைத் தேடுவோம் என்று முடிவெடுத்து நானும், அப்பாவும் தருமண்ணனும் கனகசூரியண்ணனும் சைக்கிள்களில் புறப்பட்டோம். நாங்கள் நால்வரும் குருக்கள்மடம் ஐயனார் கோயில் வரைக்கும் சென்று திரும்பி வரும்போது மீண்டும் குருக்கள்மடம் சந்தியில் நின்ற ஆயுத தாரிகளால் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டோம். நாங்கள் குணண்ணனுடைய சகோதரர்களும் அப்பாவும் என அறிந்த அவர்கள் என்னைத் தவிர மற்ற மூவருக்கும் பொல்லுகளால் அடித்து ஆயுதமுனையில் குருக்கள்மடம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றபோதுதான் தெரியும், எங்களைச் சுட்டுக் கொல்வதற்குத்தான் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று. நான் ஒன்றுமே செய்யவில்லை புலன்கள் எல்லாம் மரத்துப் போய்விட்டதாகவே உணர்ந்தேன். திடீரென்று ஒரு ஆயுதம் வைத்திருந்தவன் ஓடி வந்து "தருமண்ணா உங்கள ஏன் கூட்டிவந்தவங்க" என்று கேட்டான். தருமண்ணனின் வாடிப் போய் மரணத்தை எதிர்பார்த்த முகத்தில் ஒரு மகிழ்ச்சி வந்தது. நடந்தவற்றை அவனிடம் கூறினார். அவன் உடனே "தருமண்ணனையும் அவரோட பிடிச்சி வந்தாக்களையும் விடுங்கடா" என்று கூறி எங்களை விடுவித்து விட்டான். அவ்விடத்திலிருந்து நீண்டதூரம் வந்த பின்தான் அவன் யார் எனக் கேட்டோம். அதுவரையில் எங்கள் மரணபீதி அகன்றிருக்கவில்லை. அவர் சொன்னார் "நம்மட வேன்ல கொஞ்சக்காலம் கிளினரா வேலை செய்தவன் இப்ப இதில சேர்ந்திருக்கிறான் போல. நன்றி மறக்காமல் எம்மைக் காப்பாற்றி விட்டான்." என்று. அப்பா சொன்னார் "இதுதான் தம்பி படைமுகத்திலும் அறிமுகம் வேண்டும்" என்று. அன்று மட்டும் தருமண்ணன் அவ்விடத்தில் இல்லாமல் இருந்திருந்தாலோ அல்லது தருமண்ணனுக்கு அந்த அறிமுகம் இல்லாமல் இருந்திருந்தாலோ நாங்கள் செத்து இன்று 32 வருடங்கள் கடந்திருக்கும்.

அதன் பின்பு தப்பியோடிய குணண்ணன் ஒருவாறு வீடு வந்து சேர்ந்தான். அவனை ஆத்தாங்காட்டில் வைத்துப் பாதுகாத்தது பெரிய கதை. பின்பு ஆத்தாங்காட்டிலிருந்து ஆற்றைக் கடந்து குணண்ணனுக்கு உதவியாக நானும் படுவான்கரைக்குப் போவதற்கும் கனகசூரியண்ணனும் தருமண்ணனுமே தங்கள் உயிரையும் மதிக்காது பாதுகாப்பாக எங்களை ஆற்றைக் கடத்தி அனுப்பினார்கள். அப்போது இந்திய இராணுவம் எங்கே மறைவெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எவராலும் கூறமுடியாது, அவ்வாறான சூழலில் தருமண்ணன் செயற்பட்ட விதம் தனது சொந்த மகனுக்கு செயற்பட்டது போன்றதேயாகும்.

இது போல பல கதைகள் தருமண்ணன் எங்களுடன் செயலாற்றியமை பற்றிக் கூறலாம். இறுதியாக அவர் எனக்குச் செய்த உதவியையும் அவருடைய திறனையும் கூறாது விட்டால் எனக்கு நிம்மதி இருக்காது என்பதற்காக இதை எழுதுகின்றேன்.

கடந்த வருடம் மார்கழி மாதம் கார் எடுப்பதற்காக கொழும்பு செல்ல வேண்டும். செல்வண்ணனையும் தருமண்ணனையும் விட்டு விட்டு வேறு ஒருவரைக் கொண்டு காரை எடுத்துவர நான் விரும்பவில்லை. அதனால் இருவரையும் கொழும்புக்குச் சென்று கார் எடுத்து வருவதற்கு அழைத்தேன். இருவரும் வருவதாகக் கூறிவிட்டார்கள். எனக்கு மிக்க மகிழ்ச்சி. றெயினில்த்தான் பயணம், தருமண்ணனும் செல்வண்ணனும் நீண்டநேரமாக கதைத்தபடியே பிரயாணம் செய்தார்கள். அன்றிரவு அவர்களுக்கு நித்திரையே இல்லை. றெயினால் இறங்கியதும் குளித்து, சாப்பிட்டு விட்டு தெகிவளைக்குச் சென்று அதற்குரிய சில வேலைகளையும் முடித்துவிட்டு காரை எடுத்துக் கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட இரவாகிவிட்டது. தருமண்ணன் தேர்ச்சி பெற்ற சாரதிதான். ஆனால் அவர் தன்னியக்க வாகனம் (ஓட்டோ கார்) ஒரு போதும் ஓடியிருக்கவில்லை. அன்றுதான் முதல் முறையாக ஓடுகிறார். அதுவும் கொழும்பில், ஸ்ராார்ட் எடுப்பதில் இருந்து நிறுத்துவது வரை எல்லாம் கேட்டறிந்து விட்டு வாகனத்தில் ஏறியவர்தான் 13 வயதிலிருந்து கியர் போட்ட கை அவரை அறியாமல் கியர் போடுவதற்குப் போய் விடும். அந்தக் கைக்கும் தனக்கும் ஏசியே எங்களைச் சிரிப்புக்காட்டி ஓடி வந்தார். அந்த வயதிலும் முதல் நாளும் நித்திரை இல்லாமல் பகலிலும் சரியாக அலைந்து களைத்த பின் அன்றிரவு எந்த ஒரு இடத்தில் நிறுத்தியும் தூங்காமல் எங்களை பாதுகாப்பாக வீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தார். வீட்டுக்கு வரும்போது அவரைத் தவிர நான், செல்வண்ணன், எனது மகன் ஆகிய மூவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தோம். காரில் இருந்த இறங்கியதும் அதனைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு “அருமையான கார், ஓடுவதற்கு எந்தக் கஸ்ட்டமும் இருக்கவில்லை இப்ப திரும்பி கொழும்புக்கு போய்வரச் சொன்னால் போய்வரமுடியும்” என்று அவர் கூறியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

எங்கள் காட்டிலிருந்த ஒவ்வொரு விருட்சங்களும் காலத்துக்குக் காலம் சாய்ந்து விழுந்து கொண்டிருக்கின்றன. அவை தந்த நிழலும் பாதுகாப்பும் மகிழ்ச்சியும் மெல்ல மெல்ல என்னை விட்டு போய்க் கொண்டிருப்பதாக உணர்கின்றேன். அவைகளின் நினைவுகள்தான் எச்சங்களாக இருக்கின்றன. சென்று வா தருமண்ணா உனது நினைவுகளும் எச்சங்களாக எங்களுக்குள்ளேயே நாங்கள் இருக்கும் வரை இருக்கும். எங்களுக்குள்ளே நீங்கள் வாழப்போகிறீர்கள். இந்த வாழ்க்கையின் இயல்பும் அதுதான் என்று ஆறுதல் கொண்டு விடைபெறுகின்றேன்.

## கலாநிதி சு. சிவரெத்தினம்

# அர்ப்பணிப்புமிக்க சிறந்த பண்பாளர் தரும மாமா

அமரர் தரும மாமா அவர்கள் எனது தந்தையின் வழியில் நெருங்கிய உறவினர் என்பதால் இரு குடும்பத்தினரும் மிக நெருக்கமான உறவைக் கொண்டு இருந்தனர். இரு வீட்டாரினதும் நிகழ்வுகளில் இரு தரப்பாரும் பல தினங்கள் தங்கியிருந்து செயல்படுவர். இரு வீட்டினரிடையேயும் அடிக்கடி உணவுப் பண்டங்களையும் பரிமாறிக்கொள்வர். ஆதலால் எனது சிறு வயதிலிருந்தே தரும மாமா அவர்களை நான் நன்கு அறிவேன். அனைவரையும் கவரும் கவர்ச்சியான முகவாகு, துடிப்பான பேச்சு, உற்சாகமான நடை, துணிச்சல் மிகு செயற்பாடுகள், நட்புறவுடன் பழகும் மனப்பாங்கு, கடமையில் கண்ணியம், அர்ப்பணிப்பு மிக்க சேவை, அயராத உழைப்பு போன்ற பல மேன்மையான பண்புகள் அவரிடம் இயற்கையாகவே பொதிந்திருந்தன.

பைசிக்கிள் பாவனை கூட இல்லாத காலத்தில் கார் வைத்திருந்து சேவை புரிந்தவர் அவர். அக்காரின் இல 1 ஸ்ரீ 1683 என்று ஞாபகம். வாகனப் போக்குவரத்து குறைவான அக் காலத்தில் நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கும், பிறந்த பிள்ளைகளை வீட்டுக்கு கொண்டு வருவதற்கும், வேறு தூரப் பயணங்களுக்கும் எந்த நேரத்தில் அழைத்தாலும் உடனே வந்து ஏற்றிக் கொண்டு செல்வார். இளைஞர்கள் அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு இரவில் படம் பார்க்கச் செல்வதற்கும் இவரது காரையே பயன்படுத்துவர். இச் சேவைகளினால் “கார்காரத்தருமர்” என்ற பேரும் அவருக்கு பிரபல்யம் ஆயிற்று. பிற்காலத்தில் பேரூந்து சாரதியாகச் செயல்பட்ட காலத்திலும் அனைத்துத் தரப்பு மக்களிடத்தும் மிகுந்த நற்பெயரைச் சம்பாதித்திருந்தார்.

இந்தப் பிரதேசத்தில் அவரைத் தெரியாதவர்கள் எவரும் இல்லை எனலாம். எனது கடமையின் நிமித்தம் பல ஊர்களுக்கும் செல்கின்ற வேளைகளில் பலர் தரும மாமா அவர்களை என்னிடம் விசாரிப்பதுண்டு. அவர் எனது மாமா தான் என்று சொல்லி பெருமை கொள்வதுடன் அடுத்த தினமே அவரைச் சந்தித்து இன்னார் உங்களை விசாரித்தார் என்பதைக் கூறும் போது அவர்களுடன் தனக்கிருந்த நட்புறவைப் பற்றி எடுத்துக்

கூறுவார். தான் வாழ்ந்த காலத்தில் சமூகத் தொடர்புகளைப் பேணுவதிலும் சிறந்து விளங்கியுள்ளார். எமது கிராமத்தில் மட்டுமல்ல இப் பிரதேசம் முழுவதிலும் மக்களின் சுக, துக்க நிகழ்வுகளில் பங்கு கொள்வதற்கு அவர் தவறுவதில்லை.

ஆலயங்களுடனும் சிறப்பான தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் நான் வண்ணக்கராகக் கடமையாற்றிய 1989-1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். எமது குடிக் கூட்டங்கள், பூசைகள், திருவிழாக்கள் அனைவத்திலும் தவறாது பங்கு கொண்டுள்ளார். பூசையின்போது அபிஷேகத்துக்குத் தேவையான பழ வகைகளை அவரும் அவருடன் கொழும்பு சேவையில் ஈடுபட்ட அமரர்.கா.தட்சணாமூர்த்தியும் வாங்கிக் கொண்டு வந்து தருவார்கள். பிற்காலத்தில் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை உறுப்பினராக அவர் பணியாற்றிய வேளையில் மிகுந்த ஈடுபாட்டுடன் ஆலயத்தொண்டுகள் புரிந்ததை நான் பார்த்து இருக்கின்றேன்.

சிறந்த கூட்டுறவாளரான அவர்; ம.தெ.எ பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் சாரதியாக சீரிய பணியாற்றிய காலத்தில் இயக்குநர் சபையினர், பொது முகாமையாளர் உட்பட அனைத்துப் பணியாளர் களுடனும் பொதுமக்களுடனும் நல்லுறவைப் பேணியதன் மூலம் அவர்களனை வரினதும் பேரபிமானத்தை பெற்றிருந்தார். 1997-2001 வரை அச்சங்கத்தின் தலைவராகச் செயற்படும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்தது. அப்போது இயக்குநர் சபையினர் அனைவருடனும் நட்புறவைப் பேணி எமது செயற்பாடுகளுக்கு மிகுந்த ஒத்துழைப்பும் வழங்கியிருந்தார்.

அப்போது சங்கத்தில் இரு பஸ்கள் சேவையிலீடுபட்டுக் கொண்டிருந்தன. எமது பஸ்களுக்கு மிகுந்த கிராக்கியும் இருந்தது. பாடசாலை சுற்றுலாக்கள், தலயாத்திரைகள், கதிர்காம உற்சவங்களுக் கான யாத்திரைகள், சுப நிகழ்வுகள் என அனைத்துத் தேவைகளுக்கும் எமது பஸ்களையே பொதுமக்கள் நாடி வந்து கொண்டு இருந்தனர். பொத்துவில் தொடக்கம் வாகரை வரையான பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலை சுற்றுலாக்களுக்கு எமது பஸ்களையே நாடி வந்தனர். அவர்களது பிரதேசங்களில் பல பஸ்கள் சேவையில் ஈடுபட்டி ருந்த போதிலும் எம்மை நாடி வருவதற்கு சாரதிகளின் கண்ணியமும்,

பொது மக்களுடன் அந்நியோன்யமாகப் பழகுகின்ற தன்மையுமே காரணமாக இருந்திருக்கலாம். அப்போது தருமரெத்தினம் என்ற பெயரில் இருவர் சாரதியாகப் பணிசெய்து கொண்டு இருந்தனர். பஸ் கேட்டு வரும் அதிபர்கள் தங்களுக்கு களுதாவளை தரும அண்ணனின் பஸ்ஸைத் தந்துவிட வேண்டுமென்றே கோரிக்கை விடுப்பார்கள். அந்தளவுக்கு தரும மாமா மக்களிடம் பேரபிமானம் பெற்றிருந்தார்.

இலங்கையில் அவருக்குத் தெரியாத வழித்தடங்களே கிடையாது. எந்த இடத்துக்குச் செல்ல வேண்டும் என்றாலும் அவருக்கு எவரும் வழிகாட்ட வேண்டியதில்லை. எவ்வளவு நேரமாகினாலும் செல்கின்ற இடத்துக்கெல்லாம் பொறுமையுடன் சென்று இடங்களைக் காட்டி ஆசிரியர், மாணவர்களின் மனதை வென்றவர். எமது இயக்குநர் சபை பொறுப்பேற்ற பின் மேலும் ஒரு புதிய பஸ்ஸைக் கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்தினோம். அந்த பஸ்ஸைக் கொண்டு வருவதற்கு தரும மாமாவே போவதாக இருந்த போதிலும் அவ் வேளையில் அவர் பாடசாலை சுற்றுலா ஒன்றில் சேவையிலிருந்ததால் மற்றைய சாரதி ஒருவரை அனுப்பி பஸ்ஸை எடுத்து வந்தோம். புதிய பஸ்ஸை தரும மாமாவிடமே பொறுப்பளிக்கும் எண்ணம் எமக்கு இருந்ததால் அவர் சுற்றுலா நிறைவுற்று வந்ததும் அவரிடம் பஸ்ஸை ஒப்படைத்தோம். ஆனால் பஸ்ஸை எடுத்து வந்த சாரதிக்கும் அதில் தான் சேவையிலீடுபட வேண்டுமென்ற எண்ணம் இருந்தது போலும். அதன் காரணமாக அவர் என்னுடன் மனவருத்தப்பட்டார். பின் நாளில் அவருக்கும் அந்த பஸ்ஸை செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம். தரும மாமா அவர்கள் தான் மறைவதற்குச் சில மாதங்கள் முன்னர் கூட கூட்டுறவுச் சங்க லொறியினைச் செலுத்தி இறுதிக்காலத்தில் சங்கத்திற்கு சேவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அவர் கொழும்புக்கான சேவையில் ஈடுபட்டிருந்த காலம் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். இரவு நேரத்தில் மன்னம்பிட்டி பாலத்தினூடாக வாகனங்கள் அனுமதிக்கப்படாத சூழல் நிலவியது. கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் ஹபரணையில் ஒருசில மணித்தியாலங்கள் தரித்து நின்றுவிட்டு வந்து பாலத்தின் முன்னேயும் வரிசையில் நிற்க வேண்டும். காலை ஆறு மணியின் பின்னர்தான் பாலத்தினூடாக பயணிக்க அனுமதிக்கப்படுவதுண்டு. அவ்வாறான நாட்களில் நானும் சில தடவைகள் அவர்களது பஸ்சில்

பயணம் செய்திருக்கின்றேன். வழமையை விட மூன்று நான்கு மணித்தியாலங்கள் மேலதிக பயணம். சாரதிகள், நடத்துனர்கள் நித்திரை விழிக்க வேண்டும். சாப்பிட்டால் நித்திரை வரும் என்பதால் ஒழுங்கான சாப்பாடு இன்மை, அவ்வாறெல்லாம் கஸ்டப்பட்டு சங்கத்திற்காகவும், மக்களுக்காகவும் அவர் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றியதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவ்வாறு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய காலத்தில் சந்தர்ப்ப வசத்தால். சில காலம் தடுப்பு காவலிலும் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையொன்று அவருக்கு ஏற்பட்டது. அந்த வேளையில் மனத்திடத்துடனும் தைரியத்துடனும் முகம் கொடுத்து அதிலிருந்து மீண்டு வந்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் உள்ளவர்களை பார்வையிடச் செல்பவர்களையும் கூட தொடர்பு உள்ளவர்கள் என்று சந்தேகப் படுகின்ற காலமும் ஒன்று அப்போதிருந்தது. அவ்வாறான சூழ்நிலையில் கொழும்புக்குச் சென்று அவரைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. எனினும் 2001 ஆம் ஆண்டளவில் அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நேரம் நான் சென்று பார்வையிட்டேன். அப்போது அவர் என்னிடம் "பயமில்லாமல் தைரியமாக வந்திருக்கிறீர்களே" எனக் கேட்டார். அவ்வாறான சூழ்நிலை நிலவிய காலம் அது. தடுப்புக்காவலில் இருந்து மீண்டு வந்த பின் ஒரு நாள் எனது வீட்டுக்கு வந்து நான் பார்க்கச் சென்றது தனக்கு சந்தோசம் என்று கூறி நன்றியும் தெரிவித்துச் சென்றார்.

அவர் ஒரு சிறந்த விவசாயியும் கூட. எமது கிராமத்தில் மட்டுமல்ல படுவான்கரை வயல்களிலும் வேளாண்மை செய்கையிலீடுபட்டார். விவசாயச் செய்கையில் அவர் கடின உழைப்பாளி. இறுதிவரை அவர் அச் செய்கையைச் கைவிடவில்லை. சக விவசாயிகளுடனும் நல்லுறவைப் பேணி வந்தார்.

தரும மாமா அவர்கள் தான் சார்ந்த அரசியலிலும் தீவிர செயற் பாடுகளை வெளிப்படுத்தியவர். பிற்காலத்தில் அரசியல் நடவடிக்கை களிலிருந்து சற்று ஒதுங்கியிருந்தார். அவர் தாய்தந்தையின் வழியில் பலருக்கு மூத்த சகோதரர். அனைவருக்கும் சிறந்த தமையனாகவும், மனைவிக்குச் சிறந்த கணவராகவும், பிள்ளைகளுக்குச் சிறந்த தந்தையாகவும் இவ்வுலகில் வாழ்ந்து மறைந்துள்ளார். அவருடைய நற்பண்புகள் அனைத்தும் அமையப் பெற்றவர்களாக பிள்ளைகள் இருவரும் திகழ்கின்றார்கள்.

பிள்ளைகளின் வாழ்க்கைச் சிறப்புக்களை காணமுடியாமல் போனதுதான் அவருக்கு பெரும் கவலையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவரது மனம் போல் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல மணவாழ்க்கை அமையப்பெற்று சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துடன் சீரும் சிறப்புமாக வாழ இறைவன் அருள் புரிவார்.

அவருடன் பழகிய நாட்களை என்னால் மறக்க முடியுமென்பது இயலாதவிடயம். வீதியில் பயணிக்கும் போது எங்கு கண்டாலும் ஆளுக்காள் கை அசைக்காமல் செல்வது கிடையாது. நான் வயதில் இளையோனாக இருந்தாலும் சில விடயங்களுக்கு என்னிடம் வந்து நீங்கள்தான் இதற்கு நல்ல ஆலோசனை சொல்ல வேண்டும் தம்பி என்று கேட்பார். பின் இருவரும் ஆலோசித்து தீர்வை எடுப்போம். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவரது வீட்டுக்குச் சென்று அளவளாவி வருவது வழக்கம். நான் செல்லும் போதெல்லாம் மிகவும் சந்தோசப்படுவார்.

அவர் குறுகிய காலம் சுகவீனமுற்று சிகிச்சை பெற்ற காலத்தில் துரதிஸ்டவசமாக நானும் மகனின் சுகயீனத்தையிட்டு கொழும்பில் தங்கியிருக்க நேர்ந்ததால் அவரை வந்து பார்க்க இயலாமல் போயிற்று. இருந்தாலும் நாங்கள் வீடு திரும்பியதும் அவரது இல்லம் சென்றிருந் தேன் அன்றைய தினம் மீண்டும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக வைத்தியசாலை கொண்டு சென்று விட்டதால் பார்க்கும் வாய்ப்பு கூட கிடைக்கவில்லை. இவர் நலமடைந்து விடுவார் என்றிருந்த வேளையில் அவரது மறைவு குறித்த துயரச் செய்தி என்னைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் மாறாத சோகத்தையும் ஏற்படுத்தியது. அவரது மறைவு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களுக்கு மட்டுமல்ல எமது கிராமத்திற்கும் இப் பிரதேசத்திற்கும் கூட பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன், பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பழனித்தம்பி குணசேகரன்
பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கர், ம.தெ.எ பல்நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர், களுதாவளை.

# அன்புமிக்க அண்ணாச்சி...

எங்கள் அன்புமிக்க தருமண்ணாச்சி
நாங்கள் உங்களை எவ்வாறு மறப்போம்.
உங்களின் இறப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
நான் களுதாவளைக்கு வரும் எந்த நாளாக இருந்தாலும்
உங்களுடைய வீட்டுக்கு வராமல் போனதில்லை.

சிறுவயதிலிருந்தே எங்களைத் தூக்கி வளர்த்தவர் நீங்கள்.
என் பிறப்பிற்காக மருத்துவிச்சியை
நீங்கள் தான் அழைத்து வந்ததாக அம்மா அடிக்கடி கூறுவார்.
"பகீரதன்" என்று நீங்கள் என்னை
அன்புடன் அழைக்கும் ஒலி என் காதில்
ஒலித்தவண்ணமுள்ளது.
நீங்கள் நோயுற்றிருந்த போதும் கூட
எனது சுக நலம் விசாரிக்க குடும்பத்தாருடன்
வந்ததை என்னால் என்றுமே மறக்க முடியாது.

தருமண்ணாச்சி... உங்களைப் போன்று
அன்பும் பண்பும் பணிவும் நிறைந்தவர்களை காண்பதரிது.
உங்கள் வீட்டுக்கு வந்தால் எதையாவது
சாப்பிடத்தந்து கொண்டே இருப்பீர்கள்
"தம்பி உங்களை எப்போதும் மறக்க முடியாது" என்ற
வார்த்தையையே அடிக்கடி கூறுவீர்கள்.
அது என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.


தருமண்ணாச்சி என்றதும் நினைவுக்கு வருவது
உங்கள் சிரித்த முகமும் கலையாத முடியழகும் தான்.
எப்போதும் நேர்த்தியாகவே காணப்படுவீர்கள்
அதிகாலை நான்குமணிக்கே எழுந்து
சுயசுத்தம் பேணி அனைவரையும் எழுப்பிவிடுவீர்கள்.
இனி எப்போது நாங்கள் உங்களைக் காண்போம்.

உங்கள் மனைவி, பிள்ளைகளுடன்
நீங்கள் பேசும் விதம் அன்பு காட்டும் முறை
என்பன பலருக்கும் எடுத்துக்காட்டாக இருந்தது.
நானே பலதடவைகள் வியந்திருக்கின்றேன்.
"இவருக்கு கோபம் என்பதே வராதா" என்று.

அன்பு தருமண்ணாச்சியே நீங்கள் - எங்களை
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றுவிட்டீர்கள்.
உங்களை நாங்கள் எவ்வாறு மறப்போம்.
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"
என்பதற்கிணங்க சிறந்த வாழ்வினை வாழ்ந்து
அனைவருக்கும் முன்னுதாரணமாய் இருந்து
அமரத்துவம் அடைந்த உங்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி.... சாந்தி......

அ. பகீரதன்
பதிவாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்.



# தருமண்ணன் என்றொரு சாரதி......

தருமண்ணன் என அனைவராலும் அழைக்கப்படும் அமரர் தருமரெத்தினம் அவர்கள் என்னுடன் நீண்டநாள் பழகியவர். 1982 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து நானும் தருண்ணனின் இளைய மச்சான் அமிரும் தருமண்ணனின் தற்போதைய வீட்டின் முன்விறாந்தையில் கைகளைத் தலையணையாக வைத்து படுத்துக் கொண்டு கதையளப் போம். தருமண்ணன் எங்களை எப்போதும் "வாங்க கிளி...", "வந்து இருங்க கிளி..." என மிகுந்த அன்போடு ஆதரவு தருவார். அமிர் அத்தானுக்கு கிடைக்கும் எல்லா சிற்றுண்டிகளும் எங்களுக்கும் கிடைக்கும்.

எங்களின் இளமைக் காலத்தில் பல நாட்களை அத் திண்ணையில் மகிழ்ச்சியான நினைவுகளுடன் கழித்திருந்தோம். தருமண்ணன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த மகிழ்ச்சிக்கு தடை போட்டதில்லை. தருமண்ணன் வயல் செய்யும் போது நானும் அமிர் அத்தானும் அவர் வயலுக்குச் சென்று சுற்றித்திரிவோம். அவர் தனது உழவு இயந்திரத்தினை பழுதுபார்க்கும் போது நாங்களும் சுற்றியிருப் போம். ஒரு புதிய செய்தியை அல்லது சம்பவத்தை அறிந்தால் அதனை மிக நட்பாக எங்களுடனும் பகிர்ந்து கொள்வார். அவருடைய பகிர்வு சில நேரங்களில் நகைச்சுவையாகவும் இருக்கும். தருமண்ணன் ஒரு அழகான மினிபஸ் ஒன்றினை வைத்திருந்தவர். அதனை அவர் வீட்டருகில் நிறுத்தி வைக்கும் போதெல்லாம் அதில் ஏறி அமர்ந்து பொழுதைக் கழிப்போம்.

பின்னர் தருமண்ணன் கூட்டுறவு பஸ் சாரதியாக இருந்த காலத்தில் அந்த பஸ்ஸில் ஏறினால் அவர் வாகனம் செலுத்துவதனை பார்ப்பதற்கும், நகைசுவைகளை கேட்பதற்காகவும் தருமண்ணனின் பக்கத்தில் சென்று நின்று விடுவதுண்டு. தருமண்ணனுக்கு வாகனம் செலுத்துவது ஒரு கலை. மிக நிதானமான சாரதி. நம்பிக்கையானவர். தொழில் பக்தி கொண்டவர். சுற்றுலாக்களுக்கு தருமண்ணனையே சாரதியாக கொண்டு செல்ல எல்லோரும் விரும்புவர். நான் நினைக்கின்றேன் இலங்கையின் எல்லாப் பிரதேசமும் அறிந்திருந்தவர்.

அமரராகிவிட்ட தருமண்ணனின் நினைவுகள் அதிகம். அவரின் பிரிவு தருமண்ணனின் மனைவி, மகள் இந்துஜா, மகன் ஜெயராஜ் மற்றும் சொந்தங்களுக்கு தாங்கமுடியாத துயரத்தினை கொடுத்துள்ளது. எங்களையும் அன்னாரின் நினைவுகளை மீட்டிப்பார்க்க வைத்துள்ளது. தருமண்ணனின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இறைவன் துணையிருக்கவும், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல சுயம்புலிங்கப் பிள்ளையாரை பிரார்த்திப்போம்.

சாந்தி.... சாந்தி... சாந்தி....


கலாநிதி ச. ஜெயராஜா

(சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்.)

களுதாவளை.




# தன் துயர் சகித்து சுற்றமுடன் ஊரும் சுடர் விட்டுயர உழைத்த உத்தமன்

மட்டக்களப்பின் தென்பால் வங்கமும் வாவியும் வளமூட்ட சுயம்புலிங்கப் பிள்ளையார் அருள் சுரக்க அமைந்த பழம்பெரும் கிராமமே களுதாவளையாகும். தெங்குடன் வெற்றிலையும், செந்நெல்லும் மரக்கறியும், பாலுடன் முக்கனியும் நிறைந்த பூமி. கற்றறிந்த சான்றோர் அழகூட்டும் கவின்கலைக்கூடம். இப் புண்ணிய பூமியில் நற்குல மேலாளராக வாழ்ந்தவர்களே தம்பிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியினர். இவர்களின் பண்புநிறை முதல் புதல்வனே எமது அமரர் தருமரெத்தினம் ஆவார். இவர் நேர்மையான பண்பாளன். தன் துயர் பொறுத்துப் பிறர் துயர் துடைக்கும் அன்பாளன். இன்முகத்துடன் இணையிலா சேவை செய்தவர். தன் குடும்பமும் சுற்றத்துடன் கிராமமும் கீர்த்தி பெற சிறப்பாக பங்களித்த பெருந்தகை.

இவர் சோம்பலிலா சுறுசுறுப்பான கடும் உழைப்பாளி. தன் இளைய ஏழு சகோதரர்களுடன் இணைந்து தான் பிறந்த குடும்ப உயர்வுக்காக பாடுபட்டவர். இக் கிராமத்திலேயே தம் சொந்தத்தில் முதன் முதலில் மோட்டார் வாகனங்கள் வாங்கி அதனை தானே செலுத்தி சேவைமனப்பான்மையுடன் பணி செய்தவர். பிறர் கஷ்ட நிலையை உணர்ந்து நோயாளர்கள் மற்றும் நலிவடைந்தோருக்காக பல விட்டுக் கொடுப்புடன் சேவை செய்தவர். சகோதரர்களின் உயர்வான வாழ்க்கைக்காக உழைத்தது போன்றே தன் மனைவி மக்களின் சுபீட்சத்துக்கும் பாடுபட்டவர். மேலான கல்வி அறிவுடன் இரு புதல்வர் களும் வங்கி உத்தியோகத்தராகவும், பட்டதாரி ஆசிரியையாகவும் சேவை செய்கின்றனர்.

அவர் சோம்பிக்கிடந்தவரலாறே இல்லை. சிறப்பு மிக்க விவசாயியாக தொழிற்பட்ட அதேவேளை வாகன சாரதியாகவும் செயற்பட்டு வந்தார். களுவாஞ்சிகுடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் சாரதியாக பல வருடகாலம் சேவை செய்து பாராட்டுப் பெற்றவர்.

இவர் பொதுச் சேவையில் நாட்டம் கொண்டு உழைத்தவர். கிராம சமூக கல்வி மேம்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பினை அளித்தவர். களுதாவளை விவசாய உற்பத்திக் கிராம கூட்டுறவுச் சங்கத்தின்

நிருவாகியாகவும், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் சிறந்த உறுப்பினராகவும் தொடர்ந்து பல வருடகாலமாக செயற்பட்டு வந்தவர். அவர் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் அனைத்து பரிபாலன சபை உறுப்பினர்களுடனும் இணைந்து அமைதியாக எந்த சலசலப்புமின்றி செய்த சேவை பாராட்டக் கூடியனவாக இருந்தன. கூட்டங்களுக்கும், செயற்திட்டங்களுக்கும், பொது வேலைத் தொண்டுக்கும் நேரத்துக்கு சமூகமளித்து முழுமையாக உழைத்த சேவையாளன்.

மொத்தத்தில் சிறந்த இல்லறத்தினை ஏற்றமற நடாத்திய மேலாளர். நல்ல கணவனாக திகழ்ந்தது போன்றே சிறந்த தந்தையா கவும் சிறப்புற்றார். தாய் தந்தையரை மதித்துப் போற்றிய மகனாக வாழ்ந்தார். சகோதரர்களின் அன்பு மாறாத தனையனாக இருந்தார். சுற்றமெல்லாம் மதித்துப்போற்றும் துணைவனாக இருந்த அதேவேளை சமூகத்தின் நன்மதிப்பை நிலையாகப் பெற்ற பண்பாளனாகத் துலங்கினார்.

மேலோர் மதிக்கும் நல்வாழ்வை புகழ் பூக்க வாழ்ந்த பெருந்தகையே பூத உடல் மறைந்தாலும் உன் நல்லெச்சமெல்லாம் நிலைத்து உன் புகழை என்றும் பறைசாற்றும்.

ப.சிவலிங்கம். JP

களுதாவளை.



# "சோக்கான அண்ணன்" என்னும் தரும அண்ணன்

படுவான்கரை பெருநிலப்பரப்பில் அறந்தாங்கியில் ஒரு பிரபலமான போடியாரான "வேலரின்" மூத்த மகன் தம்பிப்பிள்ளை அவர்களின் மூத்த வாரிசான தருமரெத்தினம் எனது மச்சானாவார். இவருக்கு மூன்று தம்பியாரும், நான்கு தங்கைகளும் உடன் பிறப்புக்களாகும். மாமா அவர்கள் இவர்களை கஷ்டம் தெரியாமல் செல்லமாக வளர்த்தார். 1957களில் களுதாவளையில் இந்தப் பகுதியிலேயே முதன் முதலாக உழவு இயந்திரம் எடுத்த பெருமை இவரையே சாரும். உழவு இயந்திரம் மூலம் தனது விவசாயத் தொழிலை சிறப்பாக செய்ய மச்சான் தருமரெத்தினம் தனது பள்ளிப்படிப்பை இடையில் இடைநிறுத்தி தனது தந்தையின் விவசாயத் தொழிலுக்கு உதவியாக களம் இறங்கினார். இதனால் இவரின் தாயின் சகோதரரான தாய்மாமன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நடராசா இவருக்கு வைத்த செல்லப் பெயர் "சோக்கான அண்ணன்". இந்த பெயர் சொல்லி அவர் தம்பி தங்கைகள் மட்டுமன்றி இவர் சின்னம்மாமாரின் பிள்ளைகளும் அழைத்தார்கள்.

நான் இவருக்கு ஏழு வயது இளையவராக இருந்தபோதும் எனது அப்பா எங்களது இளவயதில் காலமாகி விட்டதால் இவர்கள் வீட்டில் இவர்களுடன்தான் எனது இளமைக்காலத்தைக் கழிப்பேன். தகப்பன் இல்லாத பிள்ளை என்று என்னை மிகவும் அன்பாகவும் பாசத்துடனும் அரவணைத்துப் பழகுவார். இந்த நிலை நான் திருமணமாகும் வரை தொடர்ந்தது. ஆனால் எனது திருமணத்தின் பின்பு இவருடனும் இவர் குடும்பத்தினருடனுமான உறவு 1978ம் ஆண்டு துண்டிக்கப்பட்டது. காரணம் அவர்கள் எதிர்பார்ப்பு அவர்கள் குடும்பத்தில் என்னை ஒருவனாக இணைத்துக் கொள்ள வேண்டுமென இருந்தது. ஆனால் விதி வசத்தால் அது கைகூடாத நிலையில் எங்களிடையே ஒரு நீண்ட பிரிவு ஏற்பட்டது. எனினும் நான் களுதாவளைப் பிள்ளையார் ஆலய பொருளாளராக நியமனம் பெற்ற பொழுது அவரும் ஒரு பரிபாலன சபை உறுப்பினராக இருந்தபடியால் எங்கள் உறவு மீண்டும் புத்துயிர் பெற்றது. இந்த இடைக்காலத்தில் அவர் குடும்பத்தில் பல மாற்றங்கள் நடந்தன. இன்பம், துன்பம் எதிலும் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை.

அதை நினைத்து இப்போதும் என் மனம் பெரிதும் வேதனைப் படுகின்றது.

1965ம் ஆண்டு தகப்பனார் புதிதாக வீடு கட்டுவதற்காக பழுகாமம் களுதாவளை துறையூடாக முதிரை மரம் ஒன்றை கொண்டுவந்து வண்டிலில் ஏற்றும் போது அது சறுக்கி விழுந்து வலது காலில் பெரும் காயத்தை ஏற்படுத்தி பெருவிரல் ஒன்றை முற்றாக இழந்து வீட்டில் முடங்கினார். அதன்பின் முழு குடும்பப் பாரத்தையும் மச்சான் தருமரெத்தினமே சுமந்தார்.

இவர் பேனாச்சி குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதும் தனது தந்தையாரின் குடும்பமான சுரக்காமூர்த்தி குடும்ப நலனிலும் அக்கறை கொண்டவராக எப்போதும் இருப்பார். 2006ம் ஆண்டு ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின. அப்போது ஆலய பரிபாலன சபைக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கி 2007ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்க உறுதுணையாக இருந்தார். இதன்பின் நாங்கள் இருவரும் மீண்டும் நல்ல நண்பர்களானோம். என்னிடம் அடிக்கடி வருவார். இவர் பலநோக்கு கூட்டுறவு சாரதியாக இருந்தபோது தனது பேரூந்தில் இவருக்கு தெரியாமல் யாரோ ஒருவன் குண்டு ஒன்றை கொண்டுசென்றிருக்கின்றான். அவன் பிடிபட்டபோது இவரது பேரூந்தில் குண்டு கொண்டு போனதாக அவன் கொடுத்த தகவலை வைத்து இவரை பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைத்த போது தனக்கு நேர்ந்த துன்பங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார்.

இப்படி என்னுடன் அப்ப அப்ப வந்து மணித்தியாலக் கணக்கில் உரையாடுவார். இந்த நோய் பாரதூரமாக வரும் முன் என்னிடம் வந்து தனக்குள்ள அல்சர் வருத்தம் பற்றி கதைப்பார். எனக்கும் அல்சர் இருப்பதால் நானும் அதற்கு என்ன செய்கின்றேன் என்ன செய்ய வேண்டும் என சொல்லி அனுப்புவேன். ஆனால் இந்நோய் அவருக்கு இவ்வளவு பாரதூரமாக வரும் அது இவரின் உயிரைக் குடிக்கும் என நான் கனவிலும் எண்ணவில்லை. உண்மையில் எனக்கு மச்சான் ஆக மட்டுமல்ல ஒரு நல்ல நண்பனாகவே இருந்தார். தேர்தல் காலங்களில் என்னிடம் வந்து யாருக்கு மச்சான் நாம் ஆதரிப்பது யாருக்கு வாக்களிப்பது என்று ஆலோசனை கேட்பார். நானும் வேட்பாளர்

பற்றி எடுத்துச் சொல்லி இன்னாருக்கு வாக்களித்தால் நல்லது என சொல்வேன். அவரும் அதனை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு செல்வார்.

இவரது மறைவு பற்றி இவரது மருமகன் சர்ஜீன் எனது போனுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதற்கு முன் என் குடும்ப உறவினரும் கொழும்பிலிருந்து தொலைபேசி ஊடாக செய்தி ஒன்றை சொன்னார். நான் அப்படியே அதிர்ந்து போனேன். பின் முகநூலில் அச் செய்தியை பதிவு செய்தேன். அப்போது இலங்கையில் இருந்து மட்டுமல்ல கனடா, லண்டன், சுவிஸ், கட்டார் போன்ற தூர தேசங்களில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் சுமார் 101 பேர் அனுதாப செய்திகளையும் இவரது நல்ல குணங்களையும் பதிவு செய்திருந்தார்கள். இதில் இந்தியாவில் இருந்து காண்டீபனின் மனைவி தாங்கள் 1994ம் ஆண்டு இலங்கை வந்தபோது மட்டக்களப்புக்கு வர இவரது பேரூந்தில் வந்ததாகவும் அந்த கடினமான நாட்களில் பொருட்களை ஏற்றி இறக்கி தங்களை பாதுகாப்பாக ஊரில் கொண்டு சேர்த்ததாகவும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே ஒரு மனிதாபிமானமும் இரக்கக் குணமும் கொண்ட ஒரு நல்ல நண்பனை, எனது மச்சானை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர்களது சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனையும் வேண்டுகின்றேன்.


## இ.சிவானந்தம்

ஓய்வுநிலை கணக்கியல் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்.

முன்னாள் பொருளாளர் - சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம், களுதாவளை.

## அல்சர் நோய் பற்றித் தெரிந்து கொள்ள ... !

தற்போதைய தரவுகளின் படி அல்சர் என பொதுவாக அழைக்கப்படும் Gastritis நோயானது, உலக சனத்தொகையில் சுமார் 10% ஆனோரை பாதித்திருக்கிறது. பெண்களில் இது ஒப்பீட்டளவில் அதிகம், அத்துடன் இந்த நோய் ஏற்படுவதற்கான ஆபத்து எமது சனத்தொகையில் அரைவாசிப்பேருக்கு உள்ளதாக அறியப்பட்டுள்ளது .

இது தொண்டைக்குழாயின் இரைப்பைக்கு அருகிலுள்ள பகுதி, இரைப்பை மற்றும் சிறுகுடலின் முன்பகுதி போன்றவற்றில் ஏற்படும் ஒரு நோய் நிலைமையாகும். இது ஏற்படக் காரணம் குறித்த பகுதியின் மேற்படையில் ஏற்படும் அழற்சி. அதாவது உங்கள் தோலில் ஏற்படும் சிராய்ப்பு போன்று சமிபாட்டு குழாயின் உள்ளே உள்ள மேற்பரப்பில் ஏற்படும் சிராய்ப்பு அல்லது காயம்தான் இந்த நோய். இதனை "அல்சர்" என அழைப்பது உண்மையில் தவறு. பெரும்பாலானோருக்கு ஏற்படுவது மேற்பரப்பில் பாதிப்பு மட்டுமே, இது மருத்துவ மொழியில் கேஸ்டிரைடிஸ் (Gastritis) எனப்படும். இதன் மிகப் பாதிப்பான வடிவமே "அல்சர்" எனப்படும் இரைப்பை சுவரில் ஏற்படும் காயங்கள், இது ஒப்பீட்டளவில் குறைவானோருக்கே ஏற்படுகிறது.

பொதுவாக நம்மவர்கள் கூறும் கதை ஒன்று உள்ளது, "நான் நேரத்துக்கு சாப்பிடல" அல்லது "நான் கொஞ்ச நாள் நிறைய எண்ணை சாப்பாடு சாப்பிட்ட" அல்லது "எங்கட வீட்டு சாப்பாட்டில் உறைப்பு கூட" அதனாலதான் எனக்கு அல்சர் வந்தது" என்பது. ஆனால் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த எமது முந்தைய சந்ததியினர் பெரும்பாலும் ஒரு வேளை அல்லது இருவேளை மட்டுமே உணவு உண்டார்கள். அவர்கள் உண்ட உறைப்பின் அளவு கூட அதிகம் தான். அவர்களை விட நாம் உண்ணும் உறைப்பின் அளவு குறைவு. நாம் இன்று தினசரி அதிகளவில் உண்ணும் இனிப்புகள் அந்தக்காலத்து பண்டிகை உணவுகள் மட்டுமே. மேலேசொன்ன அந்த காரணங்களினால் தான் இந்த நோய் வருவது என்றால் அவர்களில் பலர் அல்சர் நோயாளிகளாக அல்லவா இருந்திருக்க வேண்டும்? ஆனால் அந்தக் காலத்தோடு ஒப்பிடும்போது குறைந்தது மூன்று வேளை உணவு உண்ணும் இன்றைய

மனிதர்களே இதில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து தெரியும் உண்மை அல்சர் நோய் ஏற்படுவதற்கான உண்மையான காரணங்கள் நாம் நினைப்பவை அல்ல. எனவே இனி நாம் சரியான காரணங்களை தெரிந்து கொள்வோமா?

இந்த கேஸ்டிரைடிஸ் (Gastritis) ஏற்பட மிக முக்கியக் காரணம் ஒரு கிருமி. பிரதானமாக H.pylori எனப்படும் ஒரு பாக்டீரியா, இது ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றி அது இரைப்பையில் காயங்களை உண்டாக்கி இந்த நோய் நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால் இதிலும் ஒரு வித்தியாசம் உள்ளது. இந்த நோய்க்கிருமி பாதிக்கும் எல்லோருக்கும் இந்த நோய் நிலைமை ஏற்படுவதில்லை. உலக சனத்தொகையில் சுமார் அரைவாசியினை இந்த கிருமி பாதித்தது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால் எல்லாருக்கும் நோய் உண்டாவது இல்லை, அத்துடன் நோயை உண்டாக்கக்கூடிய வேறு காரணங்களும் காணப்படும்போதே இது அதிக அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

இந்த காரணிகளில் மிக பிரதானமானது வலி நிவாரண மாத்திரைகள், உடல் வலி, கடுப்பு என நீங்கள் அடிக்கடி ஓடிச் சென்று வெவ்வேறு வைத்தியர்களிடம் வெவ்வேறு விபரங்களைக் கொடுத்து அளவுக்கதிகமாக எடுக்கும் மருந்துகள் அல்லது வைத்திய ஆலோசனை இன்றி கடைகளில் வாங்கி விழுங்கும் கடுப்புக் குளிசைகளே இன்று பெரும்பாலானோருக்கு இந்த நோய் ஏற்படுவதற்கு காரணமாகிறது.


அடுத்த இன்னுமொரு மிக முக்கியமான காரணம் மது பாவனை, இதைப் பற்றி நான் மேலும் விளக்கத் தேவையில்லை என நினைக்கிறேன். அடுத்த முக்கிய காரணம் மன அழுத்தம். உங்கள் மன ஆரோக்கியத்திற்கும் இந்த நோய்க்கும் மிக நேரடியான தொடர்பு உள்ளது. மூளையிலிருந்து வரும் ஒரு நரம்பே இரைப்பையில் அமிலச் சுரப்பை கட்டுப்படுத்துகிறது. மூளை அதாவது மனம் ஆரோக்கியமாக இருக்கும்போது இந்த நரம்புகள் இரைப்பைக்கும் சீரான முறையில் சமிக்ஞைகளை வழங்கி இந்த நோய் நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கின்றன. அத்துடன் உடலில் ஏற்படும் வேறுசில நோய்கள் கூட கேஸ்டிரைடிஸ்/அல்சர் நோய் நிலைமைகள் உண்டாக காரணமாகின்றன.

இந்த நோய் ஏற்பட்டபின்னர் சரியான நேரத்திற்கு உணவு உண்ணுதல், அதிக உறைப்பான உணவுகள் மற்றும் பேக்கரி உணவுகளை தவிர்த்தல் என்பன பூரண குணமடையும் வரை முக்கியமானது. ஏனென்றால் இவை வயிற்றில் அமிலச் சுரப்பினை அதிகரிக்கச்செய்து நோயின் தீவிரத் தன்மையைக் கூட்டும்.


இந்த நோய்க்கான சிகிச்சை சரியாக தோலில் உள்ள ஒரு காயத்தை முழுமையாக குணமாக்குவது போலத்தான். இரண்டு நாட்களுக்கு குளிசையைப் போட்டு விட்டு வயிறு எரிச்சல் குறைந்த பின் அதை மறந்து திரிந்து விட்டு, மீண்டும் இரண்டு நாட்களின் பின்னர் இன்னும் இரு நாள் குளிசையைப் போட்டு நோயை முழுமையாக சுகமாக்க முடியாது. வைத்தியர்களால் அமில சுரப்பைக் கட்டுப்படுத்தவும், நோயின் தீவிரத் தன்மையைப் பொறுத்து கிருமிகளை அழிக்கவும் வழங்கப்படும் மாத்திரைகளை குறிப்பிட்ட காலத்துக்கு சரியாக பாவிக்க வேண்டும். அறிகுறிகள் குறைந்துவிட்டது என ஒழுங்கற்று பாவிப்பது இந்த நோய் நிலைமை மீண்டும் மீண்டும் ஏற்படுவதைக் கூட்டலாம்.

இந்த நோய்க்கு சிகிச்சை பெறாமலோ கவனிக்காமலோ விட்டால் அல்சர் எனப்படும் குடல்புண்கள் உண்டாகலாம். இவை இரைப் பையினுள் இரத்த கசிவு போன்ற நிலைமைகளை கூட ஏற்படுத்தக் கூடும், சிலவேளைகளில் வயதானவர்களில் இது துளையை உண்டாக்கி உயிராபத்தினைக் கூட ஏற்படுத்தலாம். எனவே சிகிச்சை பெறுவதில் சரியான கவனம் தேவை. வைத்தியர்களை மாற்றிச் செல்வது, விட்டுவிட்டு மருந்துகளை எடுத்தல் போன்றன இதற்கு நிரந்தர தீர்வைத் தராது. நீண்டகால சரியான சிகிச்சை மிக முக்கியமானது, அத்தோடு உளஆரோக்கியம், சரியான உணவுப்பழக்கம், மது பானங்களைத் தவிர்த்தல், வைத்திய ஆலோசனையின்றி மருந்து களைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்தல் போன்ற அனைத்தும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே இந்த நோய் மீண்டும் மீண்டும் வருவதை தவிர்த்துக் கொண்டு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்தியர்.ச.லவப்பிரதன்








# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
1943
12
04



இறைவன் அடியில்
2020
07
09

களுதாவளையைச் சேர்ந்த

## திரு. தம்பிப்பிள்ளை தர்மரெத்தினம்

(களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபையின் முன்னாள் உறுப்பினர்)

**அவர்கள் 09.07.2020 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.**

அன்னார் இரத்தினம்மா அவர்களின் அன்புக் கணவரும்
காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியின் ஆசை மகனும்,
காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நேசம்மா தம்பதியின் அன்பு மருமகனும்,
ஜெயராஜ் (தேசிய சேமிப்பு வங்கி - மட்டக்களப்பு), இந்துஜா (மட்/வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை)
ஆகியோரின் பாசமிகு தந்தையும்,
காலஞ்சென்றவர்களான பொன்னுத்தங்கம், இராசலிங்கம்,
தெய்வநாயகம், சுந்தரம்பிள்ளை மற்றும் இலட்சுமி ஆகியோரின் பெறாமகனும்
காலஞ்சென்றவர்களான நடராசா, பொன்னு, சிவக்கொழுந்து,
இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும்
சின்னத்துரை, முத்துகிருஸ்ணன், காலஞ்சென்ற தவராஜா, கிருபைநாயகி, சபாநாயகி,
அருளம்மா, சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும்
காலஞ்சென்ற மயில்வாகனம், நல்லரெத்தினம், தெய்வநாயகம், அமிர்தலிங்கம்,
கனகேஸ்வரி, சிவஜெயந்தி, கஜேந்தினி, விமலாதேவி, புஸ்பராஜா, தவராஜா,
சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும்
மாரிமுத்து, புவனேஸ்வரி, வேவி, லோகசாந்தினி காலஞ்சென்றவர்களான கனகசூரியம்,
அரசரெத்தினம், அமிர்தரெத்தினம், பாக்கியம், சாரதா மற்றும் சாந்தமலர்,
செல்வரெத்தினம், லலிதா, சிவரெத்தினம், வேவி, ரஜனி, இராசரெத்தினம் காலஞ்சென்ற
இராஜேஸ்வரன், இராஜகுமார், இராஜேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும்
காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் சகலனும்
திலக்மன்ராஜ், கமித்திரன், பிருந்தகன், வித்தியாஷாகரி, சர்ஜின், சுஜிடா, சுஜாந்தா, சுஜந்தன்
ஆகியோரின் அன்பு மாமாவும்
சஜிவன், சஜனவன், ஏகலைவன், அனித்திரா, மிதுர்ஷன்,
ஜீவிதா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10.07.2020 வெள்ளிக்கிழமை இன்று பிற்பகல் 4.00 மணியளவில் களுதாவளை பொது மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

பிரதான வீதி, களுதாவளை.

தகவல் : குடும்பத்தினர்

மாருதி, களுதாவளை.0776842223

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

# நன்றி நவிலல்

பாசத்தின் உறைவிடமாகவும் எமது இல்லத்தின் ஒளிவிளக்காகவும் இருந்து 09.07.2020 இல் இறையடி எய்திய எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் தம்பிப்பிள்ளை தருமரெத்தினம்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லம் வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் தொலைத்தொடர்பு, முகநூல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலரஞ்சலி, மலர்வளையங்கள் சாத்தியோருக்கும் பதாதைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் பலவழிகளிலும் உதவிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் உணவு தந்து உபசரித்த நல்லுள்ளங்களுக்கும் இந் நினைவுமலர் சிறப்புற அன்னாரின் நினைவுகளை பகிர்ந்துகொண்ட நல் உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர் -

# கீதையின் பாதை...



சோம்பலும் செயலிழந்த நிலையும்
கோழைகளுக்கே உரியது
அவை உனக்கு வேண்டாம்.
பலவீனங்களை தூக்கியெறிந்து வாழ்க்கைப்
போராட்டத்துக்கு ஆயத்தமாகு.
துக்கங்கள் ஏற்படுவது விதி என்று கருதி
அடிபணிகின்றவன் பாவம் செய்கின்றான்.
எதிர்ப்பைக் கண்டு அடிபணியாதே,
போராடக்கற்றுக்கொள்.
ஓடி ஒளிந்துகொள்வது பிரச்சனைகளுக்குத்
தீர்வாகாது. எதுவந்தாலும் முனைப்போடு எதிர்கொள்.
உலகத்தைத் தலைகீழாக மாற்றக்கூடிய
சக்தி உனக்குண்டு. அதை வெளிக்கொண்டுவா.
இந்த தர்மயுத்தத்தை விட மேன்மைதரக்கூடியது
வேறு எதுவும் இல்லை.
இதில் உயிரை விடநேர்ந்தாலும் உயர்வேதான்.
தர்மயுத்தத்தில் இறக்கக்கூடியவனுக்கு உலகில்
எல்லாமே கிடைக்கும்.
கடமையில் இருந்து விலகுகின்றவன்
அனைத்தையும் இழக்கின்றான்.
செயலில் இறங்க ஆயத்தமில்லாத
தனிமனிதனும் சமுதாயமும்
ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றன.
எனவே எழுந்து நில்.
எதிரிகளை தோற்கடித்து
வளமான இராஜயோகத்தை அனுபவி.

அழிவில்லாத வெற்றியை அடைவாய்.

நல்வாழ்வும் செல்வங்களும்

வீரனான உனக்கே உரியவை.

மாருதி அச்சகம், களுதாவளை. 0778842223